

# வரலாறு



## ஆவர்ஜனா

# தரம் - 11



### பல் தேர்வு வினாக்கள்





**ஆலோசனை**

**திரு. N.A.B.R. ஹேமந்த**

**வலயக் கல்வி பணிப்பாளர்**

**வழிகாட்டல் மற்றும் திட்டமிடல்**

**திருமதி. E.G. குசுமலதா**

**உதவிக் கல்விப் பணிப்பாளர்**

**சமூக விஞ்ஞானம் மற்றும் தமிழ் மொழி பாடசாலைகள்**

**தமிழாக்கம்**

- திருமதி N.பத்மலோஷனி (ஆசிரியை - கே/சாந்த மரியாள் த.ம.வி)
- திருமதி B.ஜெயப்பிரதா (ஆசிரியை - கே/வர/நாங்கல்ல மு.ம.வி)
- திருமதி S.ஜெனட்மேரி (ஆசிரியை - கே/கரண்டுப்பொன த.க.வி)
- திருமதி S.நிர்மலா (ஆசிரியை - கே/சாந்த மரியாள் த.ம.வி)

**கணினி வடிவமைப்பு**

- திரு. A.S.ஆனந்தகுமார் (பிரதி அதிபர் - கே/சாந்த மரியாள் த.ம.வி)

**சமூக விஞ்ஞானப் பிரிவு**

**கேகாலை கல்வி வலயம்**

## பொருளடக்கம்

1. கைத்தொழிற் புரட்சி

2. இலங்கையில் பிரித்தானியர் அதிகாரத்தை நிலைநாட்டல்

3. இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி

4. பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள்

5. பிரித்தானியரின் கீழ் இலங்கையில் சமூக மாற்றங்கள்

6. இலங்கை சுதந்திரம் அடைதல்

7. உலகில் இடம்பெற்ற பிரதான புரட்சிகள்

8. உலக மகாயுத்தங்களும் இணக்கப்பாடுகளும்

# பாடம் - 1
# கைத்தொழிற் புரட்சி

1. கைத்தொழிற் புரட்சி முதன்முதல் ஆரம்பமான நாடாக கருதப்படுவது.

I. பிரான்ஸ் II. இங்கிலாந்து III. ஜெர்மன் IV.ஐக்கிய அமெரிக்கா

2. கைத்தொழிற் புரட்சி தொடர்பாக புதிய கண்டுபிடிப்புகளும் அதனை கண்டுபிடித்தவர்களும் அ மற்றும் ஆ தொகுதிகளில் தரப்பட்டுள்ளன. விடைகளை ஒன்றிணைப்பதன் மூலம் பெறப்படும் சரியான விடையை தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| I. பறக்கும் நாடா (நூனாழி) | A. சாமுவேல் கொறம்ப்டன் |
| II. ரோலர் இயந்திரம் | B. ஹென்றி கோட் |
| III. ஜெனி இயந்திரம் | C. ஜோன் கே |
| IV. மியூல் இயந்திரம் | D. எட்மன்ட் காட்ரைட் |
| | E. ஜேம்ஸ் ஹாகிறீவ்ஸ் |

I. ABCD II. CBEA III. ABED IV.CEAD

3. கைத்தொழிற் புரட்சி தொடர்பாக நான்கு கூற்றுக்கள் கொடுக்கப்பட்டுள்ளது அதில் ஒரு கூற்று பிழையானது. அக்கூற்றினை தெரிவு செய்க.

I. ஜோன் கே என்பவரால் பறக்கும் நாடா (நூனாழி) கண்டுபிடிக்கப்பட்டது.

II. ஜோர்ஸ் ஸ்டீவன்சனால் புகையிரத நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது,

III. ஜேம்ஸ் ஹார்க்கியுஸினால் அதிவேக ரோவர் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

IV. குக்லி மார்க்கோணியால் வானொலி கண்டுபிடிக்கப்பட்டது.

4. 1930 ஆம் ஆண்டு நிலக்கரியைப் பயன்படுத்தி இரும்புருக்கு முறையினை கண்டுபிடித்தவர்.

I. டெம்னற் II. ஜோர்ஜ் ஸ்டீவன்சன்

III. ஜோர்ஜ் மகடம் IV. ஆபிரகாம் டார்பி

5. நிலக்கரி மூலம் இரும்புத் தாதை உருக்கும் முறையை கண்டுபிடித்தவர்.

I. ஆபிரகாம் டார்பி II. ஜோர்ஜ் ஸ்டீவன்சன்

III. வில்லியம்ஸ் சிமன்ஸ் IV. சாமுவேல் மோஸ்

6. இரும்புத்தாதை உருக்கக் கூடிய மின் அடுப்பை கண்டுபிடித்தவர்.

I. ஜோர்ஜ் வாட் II. ஹம்ரிடேவி

III. ஆபிரகாம் டார்பி IV. ஹென்றி கோட்

7. இரும்பிலிருந்து கழிவுகளை அகற்றி உருக்கு உற்பத்தி செய்யும் முறை கண்டறியப்பட்டது.

I. டெம்னற் II. ஆபிரகாம் டார்பி

III. ஹென்றி பெஸ்மார் IV. ஹென்றி கோட்

8. ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சியுடன் ஏற்பட்ட பிரதானமான சமூக மாற்றமாக கருதப்படக்கூடியது.

I. சமூகத்தில் அனைவரும் செல்வந்தர்களாகியமை.

II. வர்க்க அடிப்படையில் சமூகம் தோற்றம் பெற்றது.

III. சமூகத்தில் துஷ்பிரயோகம் அதிகரித்தது.

IV. விநோதமான கலைகள் தோற்றம் பெற்றமை.

9. சுரங்கத்தினுள் சேரும் நீரை குழாய் மூலம் வெளியேற்றவும், குழாய் மூலம் வெளியிலிருந்து வளியை அனுப்பி சுரங்கத்தை குளிரூட்டக்கூடிய நீராவியால் இயங்கும் இயந்திரத்தை கண்டுபிடித்தவர்.

I. தோமஸ் நியூ கொமன் II. ஆபிரகாம் டார்பி

III. ஹென்றி பெஸ்மார் IV. வில்லியம் சிமன்ஸ்

10. நீராவி இயந்திரத்தை கண்டுபிடித்தவர்.

I. ஜேம்ஸ் வோட் II. ஆபிரகாம் டார்பி

III. ஹென்றி பெஸ்மார் IV. வில்லியம்ஸ் சிமன்ஸ்

11. 1812 ஆம் ஆண்டு ஹம்ரிடேவியினால் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரம்.

I. பாதுகாப்பு விளக்கு II. தொலைபேசி

III. ஆகாய விமானம் IV. தொலைக்காட்சி

12. கைத்தொழில் புரட்சியின் பிரதிபலனாக ‘மெக்கடம் முறை’ அறிமுகப்படுத்தியது.

I. பெருந்தெருக்கள் அமைப்பதற்கு II. இரும்பு உருக்கு தேவைக்காக

III. தபால் தந்திகளை பரிபாறிக்கொள்வதற்காக IV. புடவை கைத்தொழிலுக்காக

13. 1811 ஆம் ஆண்டு மெக்கடம் முறையினை கண்டுபிடித்தவர்.

I. ஹம்பிறி டேவி II. ஆபிரகாம் டார்பி

III. ஜோன் மக்கடம் IV. வில்லியம் சிமன்ஸ்

14. 1814 ஆம் ஆண்டு புகையிரத என்ஜினை கண்டுபிடித்தவர்.

I. டெம்னற் II. ஜோர்ஜ் ஸ்டீவன்சன்

III. சாமுவேல் மோஸ் IV. ரொபட் முண்டன்

15. வலுவான அத்திவாரமிடப்பட்ட பெரிய கற்களையும் மண்ணையும் பரப்பி அதன் மேல் சிறிய கற்களைப்பரப்பி அவற்றைத் தட்டி மட்டப்படுத்தி பெருந்தெருக்கள் அமைக்கும் முறையினை கண்டுபிடித்தவர்.

I. டெம்லர் II. ஜோர்ஜ் ஸ்டீவன்சன்

III. ஜோர்ஜ் மெக்கடம் IV. சாமுவேல் மோஸ்

16. 1807 ஆம் ஆண்டு புகைப் படகை கண்டுபிடித்தவர்.

I. டெம்லர் II. ரொபட் புல்டன்

III. சாமுவேல் மோர்ஸ் IV. ஹென்றி பெல்

17. 1811 ஆம் ஆண்டு புகை கப்பலை கண்டுபிடித்தவர்.

I. டெம்லர் II. ரொபட் புல்டன்

III. சாமுவேல் மோஸ் IV. ஹென்றி பெல்

18. 1844 ஆம் ஆண்டு தந்தி முறையை அறிமுகப்படுத்தியவர்.

I. ஜோன் மெக்கலம் II. ரொபட் புல்டன்

III. சாமுவேல் மோஸ் IV. ஹென்றி பெல்

19. 1841 ஆம் ஆண்டு அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தவர்.

I. நிக்கலஸ் கொம்பநிகஸ் II. ஜொஹன்னஸ் கெப்லர்

III. மைக்கல் சர்டேஸ் IV. ஜொஹன்னஸ் கூட்டர்பேக்

20. வானலைகள் மூலம் செய்தி பரிமாற்றம் செய்யப்படும் வானொலியை கண்டுபிடித்தவர்

I. குக்லி மார்க்கோனி II. ஜோன்லொயி பெயார்ட்ஸ்

III. ஹென்றி பெல் IV. சாமுவேல் மோஸ்

21. தொலைக்காட்சியை கண்டுபிடித்தவர்.

I. குக்லி மார்க்கோனி II. ஜோன்லொயி பெயார்ட்ஸ்

III. ஹென்றி பெல் IV. ஜோர்ஜ் மெக்கடம்

22. தொலைபேசியை கண்டுபிடித்தவர்.

I. குக்லி மார்க்கோனி II. ஜோன்லொகி பெயார்ட்ஸ்

III. அலக்செண்டர் கிரஹம் பெல் IV. ஜோன் மைக்கல்

23. ஜென் ரோட்டல் என்பவரால் குறைந்த விதைகளைக் கொண்டு வினைத்திறனை அதிகரிப்பதற்கு அறிமுகப்படுத்திய முறை

I. வரிசையாக பயிரிடும் முறை II. பயிர் பரிமாற்று முறை

III. இரசாயன பசளை பாவித்தல் மறை IV. பாரியளவில் பயிர் செய்தல் முறை

24. செம்மறி ஆடுகள் இனப்பெருக்கம் செய்தலிலான புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்டவர்.

I. டெம்லர் II. ரொபட் பெக்வெல்

III. ஹென்றி பெல் IV. ஜோர்ஜ் மெக்கடம்

25. முதலாளித்துவ எண்ணக்கரு உலகம் முழுவதும் பரவும் வகையில் அரசின் தலையிடாக் கொள்கையை முன்வைத்தவர் யார்?

I. டெம்லர் II. வில்லியம்ஸ் சிமன்ஸ்

III. றொபட் பெக்வெல் IV. அடம்ஸ்மித்

26. இலங்கையில் முதல் தடவையாக கோப்பி பிரித்தெடுக்கும் தொழிற்சாலையை அமைத்தவர்.

I. ஹென்றி மோடி II. தோமஸ் மெயிண்ட்லண்

III. பிறடறிக் நோத் IV. ஜோர்ஜ் மெக்கடம்

27. 1950 இற்கு பின்னர் ஏற்பட்ட குடியேற்றவாதக் கொள்கை எப்பெயரால் அழைக்கப்பட்டது.

I. புதிய லிபரல் கொள்கை II. புதிய ஜனநாயக கொள்கை

III. புதிய சமூகவுடமை கொள்கை IV. புதிய குடியேற்றக் கொள்கை

28. இலங்கையில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கு பிரதான காரணமாக அமைந்த விடயம்.

I. இந்து சமுத்திரத்தின் மத்தியில் இருத்தல்

II. இலங்கை தீவாக இருத்தல்

III. இலங்கை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்தமை

IV. இலங்கை சனத்தொகை குறைவாக இருந்தமை

29. இலங்கை புகையிரத பாதை அமைப்பதற்கு முன்னோடியாக செயற்பட்டவர்.

I. ஆளுநர் ஹென்றி வோட் II. ஆளுநர் பிட்றிக் நோத்

III. ஆளுநர் மெயிண்ட்லன் IV. ஜோர்ஜ் மெக்கடம்

30. முதற் தடவையாக கொழும்பில் இருந்து கண்டிக்கு புகையிரத போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது.

I. 1869 ஆகஸ்ட் II. 1967 ஜுலை III. 1867 ஆகஸ்ட் IV. 1867 ஜுலை

31. இலங்கை நாட்டின் தபால் சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு

I. 1815 II. 1915 III. 1877 IV. 1867

32. இலங்கையில் முதல் தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

I. 1857 II. 1967 III. 1877 IV. 1867

33. தந்தி மூலம் தபால் சேவை பரிமாற்றும் (Telegraph) சேவை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு

I. 1858 II. 1857 III. 1877 IV. 1867

34. கொழும்பு - கண்டி பெருந் தெருவினை அமைத்தவர்.

I. ஹென்றி வோட் II. தோமஸ் மெயிண்ட்லன்

III. பிட்றிக் நோத் IV. எட்வாட் பான்ஸ்

35. கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட சாதகமான விடயங்கள்

I. புதிய நாடுகள் கண்டு பிடித்தல், சந்தை விரிவாக்கம்

II. நகரமயமாக்கம், சூழல் மாசடைதல்

III. கலாசார மாற்றம், பொருட்கள் உற்பத்தி அதிகரித்தல்

IV. புதிய கண்டுபிடிப்புகள் ஏற்பட்டது, பொருள் பாவனை அதிகரித்தது.

36. உரம் உற்பத்தியின் பொருட்டு அனுபவத்தை பெற்றுக் கொள்ள முதன் முதலில் தயாரிக்கப்பட்ட 'குவானோ' எனும் உரம் எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது.

I. தென் ஆபிரிக்கா II. அமெரிக்கா III. கனடா IV. பிரித்தானியா

37. 1840 ஆம் ஆண்டு குறுகிய காலத்தில் குறைந்த செலவில் கடிதங்களை பரிமாற்றிக் கொண்ட சேவை எவ்வாறு அழைக்கப்பட்டது?

I. பெனி தபால் சேவை II. தந்தி சேவை

III. தபால் தந்தி சேவை IV. தபால் பரிமாற்று சேவை

# பாடம் - 2
# இலங்கையின் பிரித்தானியரின் அதிகாரத்தை நிலைநாட்டல்

1. பிரித்தானியர் இலங்கையின் கரையோர பிரதேசங்களில் ஆட்சியை நிலைநாட்டிய ஆண்டு.

   I. 1815 II. 1796 III. 1799 IV.1802

2. பிரித்தானியரின் ஆட்சிகாலத்தில் "ஆள்வரி" விதித்த ஆளுநராக கருதப்படுபவர்.

   I. றொபட் பிறவுன்றிக் II. தோமஸ் மெயிண்ட்லண்ட்
   III. டொரிண்டன் தூதுவர் IV. பிட்றிக் நோத்

3. பிரித்தானிய இராணுவப் படையினால் இந்நாட்டின் முதல் தடவையாக கைப்பற்றிக் கொள்ள முடிந்த கரையோர பிரதேசம் எது?

   I. மட்டக்களப்பு II. கொழும்பு III. காலி IV. திருகோணமலை

4. இலங்கையின் முதலாவது ஆளுநர் யார்?

   I. றொபட் பிறவுன்றிக் II. தோமஸ் மெயிண்ட்லன்ட்
   III. கோல்புறூக் IV. பிட்றிக் நோத்

5. இரட்டை ஆட்சி என்றால் என்ன?

   I. பிரித்தானிய ஆட்சியையும், ஒல்லாந்து ஆட்சியையும் இந்நாட்டில் பகிர்ந்து ஆட்சி செய்தமை
   II. பிரித்தானிய ஆட்சி, பிரான்சிய கிழக்கு வர்த்தக கம்பனியும் பகிர்ந்து ஆட்சி செய்தமை
   III. ஒல்லாந்து ஆட்சியும் இலங்கை மன்னனும் பகிர்ந்து ஆட்சி செய்தமை
   IV. பிரித்தானியா கிழக்கிந்திய வர்த்தக கம்பனியுடன் இணைந்து இந்நாட்டின் கரையோர பிரதேசங்களை ஆட்சி செய்தமை.

6. மலை நாட்டுடன் போரிடுவதற்கு பதிலாக இரண்டு அணிகளுக்கிடையில் சமாதானம் பேச்சு வார்த்தையின் படி ஆட்சியை மேற்கொள்ள காரணமாக இருந்தவர்.

   I. றொபட் பிறவுன்றிக் II. தோமஸ் மெயிண்ட்லன்
   III. கோல்புறூக் IV. பிட்றிக் நோத்

7. பிரித்தானியருக்கு எதிராக மலைநாட்டினுள் முதன்முதலாக கிளர்ச்சி இடம்பெற்ற பிரதேசம்

   I. கண்டி II. கொழும்பு III. ஊவா வெல்லஸ்ஸ IV. கேகாலை

8. 1818 ஆம் ஆண்டு பிரிதானியருக்கு எதிரான முரண்பாடு ஏற்பட்ட காலத்தில் இந்நாட்டில் இருந்த ஆளுநர்.

   I. றொபட் பிறவுண்டிக் II. தோமஸ் மெயிண்ட்லன்
   III. எட்வாட் பான்ஸ் IV. பிட்றிக் நோத்

9. 1818 பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிக்கு பதிலடியாக ஆளுநர் எடுத்த முடிவு.

I. தனது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு இராணுவச் சட்டத்தை விதித்தல்
II. மலைநாட்டை தனது ஆட்சிக்கின் கீழ் உட்படுத்த முயற்சியாமை?
III. புனித தந்து தாதுவை பிரித்தானியரிடமிருந்து கொண்டு செல்லல்
IV. மலை நாட்டு சுதேச அதிகாரிகளுக்கு மக்களிமிருந்து பரிசு பெற அனுமதி வழங்கல்.

10. 1948 ஆம் ஆண்டு இரண்டாவது கிளர்ச்சிப் போராட்டம் இடம் பெறும் வேளையில் இந்நாட்டில் ஆளுநராக இருந்தவர் யார்?

I. றொபட் பிறவுன்றிக்
II. தோமஸ் மெயிண்ட்லன்
III. எட்வாட் பான்ஸ்
IV. டொரிண்டன்

11. பிரித்தானியருக்கு எதிராக மலைநாட்டு பிரதேசங்களில் ஏற்பட்ட முதல் சுதந்திரப் போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணமாக அமைவது.

I. சிறுபாண்மை இன நிர்வாகிகளை நியமிப்பதற்கு குதேச அதிகாரிகளுக்கு அனுமதி கிடைத்தமை.
II. பிரித்தானிய அதிகாரிகளின் தொகை குறைக்கப்பட்டமை.
III. மொல்லிகொட மகா அதிகாரமேயை பிரித்தானியாவுக்கு கொண்டு வெல்லல்.
IV. கெப்பபடிபொல மற்றும் மடுகல்ல ஆகிய தலைவர்கள் சிரசேதம் செய்யப்பட்டமை.

12. பிரித்தானியா இலங்கை மீது கவனம் செலுத்தியமைக்கான காரணம் ஒன்றாக அமைவது

I. சுதேச மக்களை கிறிஸதவ மதத்திற்கு மாற்றுவதற்கான அவா.
II. இந்து சமுத்திரத்தில் கப்பல் போக்குவரத்திற்காக திருகோணமலை துறைமுகத்தின் முக்கியத்துவம்.
III. பெருந்தோட்ட பயிர் செய்கைக்கு நிலங்களைப் பெற்றுக்கொள்ள இருந்த தேவைப்பாடு.
IV. ஒல்லாந்தரை விரட்டுவதற்காக இலங்கை அரசனுக்கு உதவியமை.

13. பாதுகாப்பிற்காக மறைந்திருந்த மன்னன் மற்றும் அவரது மனைவியையும் மலை நாட்டினரால் ஆங்கிலேயருக்கு காட்டிக்கொடுக்கப்பட்ட ஆண்டு.

I. 1815 பெப்ரவரி 18
II. 1803 பெப்ரவரி 18
III. 1802 பெப்ரவரி 18
IV. 1815 மார்ச் 08

14. மலைநாட்டு உடன்படிக்கையில் கைசாத்திடப்பட்ட ஆண்டு.

I. 1815 மாரச் 02
II. 1803 மார்ச் 18
III. 1802 பெப்ரவரி 18
IV. 1815 மார்ச் 08

15. ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிம் முகந்திரம் நியமிக்கப்பட்டது.
I. கோட்டை II. வெல்லஸ்ஸ III. மாகம IV. மாத்தளை

16. பிரித்தானியர் இந்நாட்டுக்கு வருகை தரும்போது இங்கிருந்த ஒல்லாந்த ஆளுநர் யார்?
I. பான் எங்கள் பெக் II. தோமஸ் மெயின்ட்லண்ட்
III. எட்வட் பாண்ஸ் IV. பிறடறிக் நோத்

17. மலைநாட்டினை கைப்பற்றிக் கொள்வதற்காக றொபட் பிறவுண்டிங் ஆளுநருக்கு உதவி செய்தவர்.
I. டொரிண்டன் II. ஜொரிஸ்வான் ஸ்பில்பேஜன்
III. ஜோன் டொயிலி IV. பிறடறிக் நோத்

18. 1815 இல் மலைநாட்டினை கைப்பற்றிய பிரித்தானிய ஆளுநர் யார்?
I. றொபட் பிறவுண்றிங் II. தோமஸ் மெயின்ட்லண்ட்
III. கோல்புறூக் IV. பிட்றிக் நோத்

19. 1818 மலைநாட்டு சுதந்திர போராட்டத்தின் போது பிரித்தானியருக்கு விசுவாசமாய் இருந்த பிரதானி யார்?
I. மொல்லிகொட திசாவே II. எஹலபொல அதிகாரமே
III. ரட்டேரால IV. கொஹ்காலே கொட பண்டா

20. ஸ்ரீ விககிரம சிங்கனின் ஆட்சிக் காலத்தில் சபரகமுவா பிரதேசத்திற்குப் பொறுப்பாக இருந்த பிரதானி யார்?
I. மொல்லிகொட திசாவே II. எஹலபொல அதிகாரமே
III. மடுகல்லே திசாவே IV. வீரபுரன் அப்பு

21. 1818 ஆங்கிலேயருக்கு எதிராக இடம் பெற்ற போராட்டத்தினை அடக்குவதற்காக அவர்களால் ஊவா பிரதேசத்திற்கு அனுப்பப்பட்ட சிங்கள அதிகாரி ஒருவர் பின்னர் போராளிகளின் பக்கம் சேர்ந்து கொண்டார். அவர் யார்?
I. பிலிமதலாவ II. கெப்படிபொல
III. மடுகல்லே IV. மொல்லிகொட நிலமே

22. ஸ்ரீ விக்கிரமசிங்க மன்னரை ஆட்சியிலிருந்து தூக்கியெறிய பின்னனியில் இருந்து செயற்பட்டவர்
I. றொபட் பிறவுன்றின் II. பிட்றிக் நோத்
III. ஜோன் டொய்லி IV. எஹலபொல மகா அதிகாரமே

23. பிரித்தானியரால் மலைநாட்டினை கைப்பற்றிக் கொள்வதற்கு முதல் முயற்சி எடுக்கப் பட்டது 1803 இல் ஆகும். இந்த தாக்குதலை மேற்கொண்ட ஆளுநர் யார்?
I. றொபட் பிறவுன்றின் II. பிட்றிக் நோத்
III. வில்லியம் கிரகரி IV. டொனமூர் தூதுவர்

24. பிரித்தானியரின் ஆட்சி காலத்தில் இலங்கையில் இருந்த அவுமில்தாரர்கள் எனப்படுவோர்.

I. நீதி தொடர்பானவர்கள் II. ஆளுநருக்கு ஆலோசனை வழங்குபவர்கள்

III. வீர புருஷர்கள் IV. வரி அறவிடும் அதிகாரிகள்

25. இலங்கையின் புகையிரத பாதையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்த ஆளுநர்

I. ஹென்றி வோட் II. எட்வாட் பாண்ஸ்

III. வெஸ்ட் ரிச்வே IV. ஹாக்கியுஸ்ட் ரொபின்ஸன்

26. மத்திய மலைநாட்டிற்கு வருகை தந்த முதலாவது ஆங்கில தூதுவர் யார்?

I. மெக்டொவல் II. ஹியுபொயிண்ட்

III. றொபட் அன்றூசன் IV. ஜோன் பைபஸ்

27. இலங்கையில் கச்சேரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

I. சென்னை ஆட்சியாளர்களினால் II. இரட்டை ஆட்சியின் போது

III. கிழக்கிந்திய வர்த்தக ஆட்சியின் போது IV. ஒல்லாந்தர் ஆட்சியின் போது

28. சபரகமுவ கிளர்ச்சியின் போது எஹலபொலவை கைது செய்ய முடியாமல் போனமையினால் ஆட்சியினை காப்பற்றிக்கொள்ள மேற்கொண்ட நடவடிக்கை

I. மனைவி மற்றும் பிள்ளைகளை மனிதாபிமானமற்ற முறையில் கொலை செய்தல்

II. அனைவரையும் சுட்டுக் கொலை செய்தமை

III. அனைவரையும் சிரச்சேதம் செய்தமை

IV. அனைவரையும் நாடு கடத்தியமை

29. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கு எதிராக சபரகமுவ கிளர்ச்சியை ஏற்படுத்தயது யார்?

I. எஹலபொல II. பிலிமதலாவ

III. மொல்லிகொட IV. எக்நெல்கொட

30. 1815 மலைநாட்டு உடன்படிக்கைக்கு கைச்சாத்திட்ட ஆங்கிலேய ஆளுநர் யார்?

I. ஹென்றி மெல்கம் II. ஹியூ கிளிபட்

III. றொபட் பிரவுன்றின் IV. தோமஸ் மெயிண்லன்ட்

31. கெப்படி பொல மற்றும் மடுகல்ல ஆகிய இருவரும் சிரச்சேதம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட ஆண்டு

I. 1818 நவம்பர் 26 II. 1818 ஆகஸ்ட் 26

III. 1815 மார்ச் 02 IV. 1818 செப்டம்பர் 26

32. 1848 இரண்டாம் சுதந்திர போராட்டத்தின் போது மன்னனாக முடி சூடியவர்.

I. வீரபுரன் அப்பு II. டிங்கிரி ரால

III. பூட்டாவே ரட்டேரால IV. கொங்காலே கொட பண்டா

33. 1848 சுதந்திர போராட்டத்திற்கு காரணமான புதிய நீதித்துறை சீர்த்திருத்தத்தினை மேற்கொண்டவர்

I. டொரிங்டன் ஆளுநர் II. கோல்புறூக் ஆளுநர்

III. சார்ல்ஸ் H கமரன் IV. எட்வட் பான்ஸ்

34. 1848 சுதந்திர போராட்டம் ஏற்படுவதற்காக கிட்டிய காரணம்.

I. 1846 இல் இயற்றப்பட்ட தரிசு நில் சட்டம்

II. அரசின் புதிய வரிக் கொள்கை

III. புதிய நீதித் துறை அறிமுகப்படுத்தியமை

IV. அரசனுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு முறிந்தமை

35. புதிய வரிக்கொள்கையினால் 1848 சுதந்திர போராட்டம் தோல்வியடைந்தது. இவ்வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்தி ஆளுநர்

I. பிட்றிக் நோத் II. டொரிங்டன்

III. தோமஸ் மெயிண்ட்லன்ட் IV. றொபட் பிறவுன்றின்

36. மலை நாட்டு ஒப்பந்தத்தில் கைசாத்து இடுவதற்கு முன் ஏற்பட்டிருந்த பிரித்தானிய கொடியினை இறக்கி சிங்கள கொடியினை ஏற்றிய தேரர்.

I. ஹக்கடுவே ஶ்ரீ சுமங்கல தேரர் II. பரணகல தேரர்

III. வாரிபொல சுமங்கல தேரர் IV. கடஹபொல தேரர்

37. மலைநாட்டு இராஜதானியை அடிமைப்படுத்திக் கொள்ள தந்திர உபாயமாக செயற்பட்டவர்

I. த மியுரன் II. டொரிங்டன் III. கோல்புறூக் IV. ஜோன் டொயிலி

38. ஶ்ரீ விக்கிரம ராஜசிங்கன் எனும் பெயரில் அரசனானவன்

I. கன்னுசாமி II. துரைசாமி III. முத்துசாமி IV. டிகிரி குமார

39. 1762 இல் ஜோன் பைபஸ் மலைநாட்டிற்கு வருகை தந்தபோது மலைநாட்டை ஆட்சி செய்தவர்.

I. ஶ்ரீ விக்கிரம ராஜசிங்கன் II. கீர்த்தி ஶ்ரீ ராஜசிங்கன்

III. ராஜாதி ராஜசிங்க IV. 2ஆம் ராஜசிங்கன்

40. 1782 இல் ஹியுபொயிட் மற்றும் 1795 இல் றொபட் அன்றூஸ் மலை நாட்டுக்கு வருகை தந்தபோது மலை நாட்டினை ஆட்சி செய்தவர்

I. ஶ்ரீ விக்கிரம ராஜசிங்கன் II. கீர்த்தி ஶ்ரீ ராஜசிங்கன்

III. ராஜாதி ராஜசிங்க IV. 2ஆம் ராஜசிங்கன்

41. கெப்படி பொலவின் தலைமையில் ஏற்பட்ட போராட்டத்தில் மலைநாட்டு அரசனாக பிரகடனப்படுத்தப்பட்டவர்.

I. கன்னுசாமி II. துரைசாமி III. முத்துசாமி IV. டிகிரி குமார

42. 1800 ஆம் ஆண்டு ஆளுநர் நோத்தினால் மலை நாட்டிற்கு அனுப்பப்பட்ட தூதுக் குழுவின் தலைவர் யார்?

I. தளபதி மெக்டோவல் II. ஜோன் பைபஸ்

III. ஹியு பொயிட் IV. றொபட் அன்றூஸ்

43. பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினால் இலங்கை கரையோர ஆட்சி எவ்வாறு அழைக்கப்பட்டது?

I. டில்லி ஆட்சி II. கோவா ஆட்சி III. சென்னை ஆட்சி IV. மும்பாய் ஆட்சி

44. 1818 ஆம் ஆண்டு கிளர்ச்சியில் பங்கு கொள்ளாத இரு பிரதானிகளை குறிப்பிடுக.

I. எஹலபொல, பூட்டாவே ரட்டேரால

II. மொல்லிகொட, எஹலபொல,

III. எஹலபொல, எஹலபொல,

IV. கொங்காலேகொட பண்டா, பூட்டாவே ரட்டேரால

45. 1798 ராஜாதி ராஜசிங்கனின் மரணத்திற்கு பின் மலைநாட்டு சிங்காசனத்திற்கு உரிமைக் கோரிய மன்னர்கள்

I. கன்னுசாமி, டிகிரி குமார II. துரைசாமி, முத்துசாமி

III. கன்னுசாமி, துரைசாமி IV. முத்துசாமி, கண்ணுசாமி

46. 1797 ஆம் ஆண்டு கரையோர பிரதேசத்தின் நிலைமையை தேடியறிய அனுப்பப்பட்ட ஆணைக்குழு எது?

I. தளபதி மெக்டோவல் II. ஜோன் பைபஸ்

III. ஹியு பொயிட் IV. ஜெனரல் டி மியுரன்

47. 5ஆம் வில்லியம் மன்னனால் கரையோர பிரதேசத்தின் ஆட்சி அதிகாரத்தை பிரித்தானியரிடம் ஒப்படைக்குமாறு ஆலோசனை வழங்கி ஒல்லாந்துக்கு அனுப்பப்பட்ட கடிதம் எவ்வாறு அழைக்கப்படும்?

I. கியூ கடிதம் II. எக்ஸ் கடிதம் III. கியூ எக்ஸ் கடிதம் IV. கே கடிதம்

48. ஊவாவெல்லஸ்ஸ கிளர்சிக்கு தலைமை தாங்கிய துரைசாமியை கைது செய்ய அனுப்பப்பட்ட தூதுவர் யார்?

I. டக்லஸ் வில்சன் II. ஜோன் பைபஸ்

III. ஹியு பொயிட் IV. ரொபட் அன்றூஸ்

49. 1848 ஆம் ஆண்டு இரண்டாம் சுதந்திர போராட்டம் ஏற்பட்ட காலத்தில் காலணித்துவ செயலாளராக இருந்தவர்.

I. குறூசேம் II. டொரிண்டன் III. சோல்பரி IV. எமர்சன்

50. 1848 ஆம் ஆண்டு இரண்டாம் சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய தேரர்

I. வாரிபொல ஸ்ரீ சுமங்கல தேரர் II. மீகெட்டு வத்த குணாநந்த தேரர்

III. இரத்மலான தம்மாலோக தேரர் IV. கடஹபொல தேரர்

# பாடம் - 3
# இலங்கையின் தேசிய மறுமலர்ச்சி

1. கிறிஸ்தவ சமயத்தை இந்நாட்டில் பரப்புவதற்கு செயற்பட்ட அமைப்பு

I. சமய பூஸ்திகா சங்கம் II. சார்க் அமைப்பு

III. யாழ்ப்பாண சங்கம் IV.மிசனரி சங்கம்

2. இலண்டன் மிசனரி சங்கம் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு

I. 1804 II. 1808 III. 1815 IV.1819

3. வெஸ்லியன் மிசனரி சங்கம் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு

I. 1814 II. 1812 III. 1805 IV.1800

4. அமெரிக்க மிசனரி சங்கம் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு

I. 1810 II. 1816 III. 1812 IV.1808

5. 1932 ஆம் ஆண்டு அச்சகம் நிறுவியதன் மூலம் சேர்ச் மிசனரி சங்கத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

I. மாசிக்கதேக II. ஞானார்த்த பிரதீபய III. லங்கா நிதானய IV. உரகல

6. 1840 ஆம் ஆண்டு அச்சகம் நிறுவியதன் மூலம் சமய பூஸ்திகா சங்கத்தின் மூலம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட வெளியீடு.

I. மாசிக்கதேக II. ஞானார்த்த பிரதீபய III. லங்கா நிதானய IV. உரகல

7. 1842 ஆம் ஆண்டு அச்சகம் நிறுவியதன் மூலம் பெப்டிஸ்ட் சங்கத்தின் மூலம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட வெளியீடு.

I. மாசிக்கதேக II. ஞானார்த்த பிரதீபய III. லங்கா நிதானய IV. உரகல

8. இரத்மலானை பரமதம்ம சேதிய பிரிவேனாவை அமைப்பதற்கு பிரதானமாக செயற்பட்ட தேரர்

I. ஹிக்கடுவ சுமங்கல தேரர் II. மீகெட்டுவத்தே குணானந்த தேரர்

III. வஸ்கடுவே சுபூதி தேரர் IV. வாலானே சித்தார்த்த தேரர்

9. மாளிகாகந்த வித்தியோதய பிரிவேனாவை ஆரம்பிப்பதற்கு பிரதானமாக செயற்பட்ட தேரர்

I. வாலானே சித்தார்த்த தேரர் II. மீகெட்டுவத்தே குணானந்த தேரர்

III. இரத்மலானை தம்மாலோக தேரர் IV. ஹிக்கடுவ சுமங்கல தேரர்

10. பேலியகொட வித்தியாலங்கார பிரிவேனாவை அமைப்பதற்கு முன்னோடியாக செயற்பட்ட தேரர்

I. வாலானே சித்தார்த்த தேரர் II. மீகெட்டுவத்தே குணானந்த தேரர்

III. இரத்மலானை தம்மாலோக தேரர் IV. ஹிக்கடுவ சுமங்கல தேரர்

11. இரத்மலானை தம்மாலோக தேரர் மூலம் வித்தியாலங்கார பிரிவேனா அமைக்கப்பட்ட ஆண்டு.

I. 1870 II. 1875 III. 1850 IV.1950

12. ஹிக்கடுவ தம்மாலோக தேரர் மூலம் வித்தியோதய பிரிவேனா அமைக்கப்பட்ட ஆண்டு.

I. 1870 II. 1875 III. 1873 IV.1850

13. இலங்கையின் மிகப்பழைமையான பத்திரிகை

I. ஞானார்த்த தீப II. லங்கா லோக III. சரசவிய சந்தேச IV. சிங்கள பௌத்தயா

14. 1902 ஆம் ஆண்டு சிங்கள பத்திரிகையை ஆரம்பித்து வைத்தவர்

I. ஸ்டீல் ஒல்கோட் II. அநகாரிக தர்மபால

III. D.R. விஜேவர்தன IV. பியதாச சிரிசேன

15. 1909 ஆம் ஆண்டு தினமின பத்திரிகையை ஆரம்பித்து வைத்தவர்

I. ஸ்டீல் ஒல்கோட் II. அநகாரிக தர்மபால

III. D.R. விஜேவர்தன IV. பியதாச சிரிசேன

16. தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் மூலமாக புராதன கலாசார விடயங்களை வெளி கொண்டுவர காரணமாக இருந்த நிபுணர்களை கொண்ட விடைத் தொகுதி

I. பரண விதாரன, H.C.P. பெல், ஹென்றி பாகர், வலிசிங்க ஹரிச்சந்திர

II. ரிஸ் டேவிஸ், H.C.P. பெல், ஹென்றி பாகர், ஜோர்ஜ் வோனர்

III. H.C.P. பெல், ஹென்றி பாகர், வலிசிங்க ஹரிச்சந்திர, ஜோர்ஜ் வோனர்

IV. H.C.P. பெல், ரிஸ் டேவிஸ், வலிசிங்க ஹரிச்சந்திர, ஜோர்ஜ் வோனர்

17. நாட்டின் செல்வந்தர்கள் மற்றும் சீய நாட்டு அரசின் மூலம் கிடைத்த உதவிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட அச்சகம்.

I. லங்கா அபிநவ II. காலி லங்கோபகார அச்சகம்

III. சுதர்ஷன அச்சகம் IV. கவடகதிக அச்சகம்

18. ஐம்பெரும் விவாதங்களில் சர்வதேச பிரசித்தி பெற்ற விவாதம் எது?

I. பத்தெகம விவாதம் II. வராகொட விவாதம்

III. உதன்விட விவாதம் IV. பாணந்துறை விவாதம்

19. பாணந்துரை விவாதத்தின் பிரசித்தி பெற்றவர் யார்?

I. வஸ்கடுவே சோபித தேரர் II. மீகெட்டுவத்த குணானந்த தேரர்

III. பொத்துவில் இந்திரஜோதி தேரர் IV. இரத்மலானை தம்மாலோக தேரர்

20. ஆங்கிலேய ஆட்சியில் 1915 ஆம் ஆண்டு யுத்த பிரகடனம் மேற்கொண்டு பௌத்தர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் வேலையில் அவர்களுக்காக குரல் கொடுத்தவர்.

I. மீகெட்டுவத்த குணானந்த தேரர் II. பொன்னம்பலம் இராமநாதன்

III. ஆறுமுக நாவலர் IV. பொன்னம்பலம் அருணாச்சலம்

21. வெசாக் மற்றும் பௌர்ணமி தினங்களை அரச விடுமுறையாக்கியவர்.

I. வலிசிங்க ஹரிச்சந்திர II. அநகாரிக தர்மபால

III. ஸ்டீவ் ஒல்கொட் IV. பியதாச சிரிசேன

22. இந்து சமய மறுமலர்ச்சியின் தலைவர்

I. M.C. சித்திலெப்பை II. பொன்னம்பலம் இராமநாதன்

III. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் IV. ஆறுமுக நாவலர்

23. ''அ'' மற்றும் ''ஆ'' தொகுதிகளில் தரப்பட்டுள்ளன. விடைகளை ஒன்றிணைப்பதன் மூலம் பெறப்படும் சரியான விடை

| அ | ஆ |
|---|---|
| I. கொழும்பு ஆனந்தா கல்லூரி நிறுவப்பட்டது | A. ஹிக்கடுவ சுமங்கல தேரர் |
| II. இந்தியாவின் மகா போதி சங்கம் நிறுவப்பட்டது | B. M.C சித்திலெப்பை |
| III. மாளிகாகந்த வித்தியோதய பிரிவேனா நிறுவப்பட்டது | C. அநகாரிக தர்மபால |
| IV. மருதானை சாஹிரா வித்தியாலயத்தை ஆரம்பித்தவர் | D. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் |
| | E. வாரிய பொல சுமங்கல தேரர் |

I. CABE II. DCAB III. DCBA IV.DEBA

24. ஹென்றி ஸ்டீவ் ஒல்கொட், அநகாரிக தர்மபால, ஆறுமுக நாவலர், சித்திலெப்பை ஆகியோரின் பொது நோக்கு

I. சமயம் மற்றும் கல்வி மறுமலர்ச்சியினை முதன்மைபடுத்தல்

II. புராதன இலங்கையின் மேன்மையை உலகிற்கு காண்பிக்க

III. மது ஒழிப்பு இயக்கத்திற்கு தலைமை தாங்குதல்

IV. அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் வேண்டி ஆர்ப்பாட்டம் செய்வதற்கு.

25. 1872 இல் தமிழ் மாணவர்களுக்கு ஆங்கில அறிவை வளர்ப்பதற்காக யாழ்ப்பாணத்தில் சைவ ஆங்கில வித்தியாசாலையான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை ஆரம்பித்தவர்

I. M.C. சித்திலெப்பை II. பொன்னம்பலம் இராமநாதன்

III. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் IV. ஆறுமுக நாவலர்

26. 1910 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சீர்திருத்தத்தின்படி படித்த இலங்கை ஒருவரை தெரிவின் போது சிங்கள வேட்பாளர்களை தோல்வியடையச் செய்து ஆசனம் பெற்றுக் கொண்டவர்.

I. M.C. சித்திலெப்பை II. பொன்னம்பலம் இராமநாதன்

III. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் IV. ஆறுமுக நாவலர்

27. ஆறுமுகநாவலரின் தேசிய இலட்சியத்தின் பிரதான இடம் பிடித்தது

I. பௌத்த கல்வி நடவடிக்கை II. முஸ்லிம் கல்வி நடவடிக்கை

III. இந்து கல்வி நடவடிக்கை IV. தோட்ட தொழிலாளர் நடவடிக்கை

28. இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்ட ஆண்டு

I. 1819 II. 1919 III. 1879 IV.1909

29. மதரசா எனப்படும் முஸ்லிம் சமய பாடசாலையை ஆரம்பதற்கான முன்னோடி

I. M.C. சித்திலெப்பை II. பொன்னம்பலம் இராமநாதன்

III. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் IV. ஆறுமுக நாவலர்

30. இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடி

I. M.C. சித்திலெப்பை II. பொன்னம்பலம் இராமநாதன்

III. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் IV. ஆறுமுக நாவலர்

31. தன்னுடைய சொந்த செலவில் பரமேஷ்வரா மற்றும் இராமநாதன் கல்லூரிகளை நிறுவியவர்.

I. M.C. சித்திலெப்பை II. பொன்னம்பலம் இராமநாதன்

III. ஹென்றி ஸ்டீவ் ஒல்கொட் IV. ஆறுமுக நாவலர்

32. 1919 ஆம் ஆண்டு இலங்கை தேசிய சங்கத்தை நிறுவுவதற்கு சிங்களத் தலைவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டவர்

I. M.C. சித்திலெப்பை II. பொன்னம்பலம் இராமநாதன்

III. பொன்னம்பலம் அருணாச்சலம் IV. ஆறுமுக நாவலர்

33. நாவல்கள் மற்றும் செய்தித் தாள்கள் வழியாக மேற்கத்திய கலாசாரம் வணிகமயமாவதை விமர்சித்தவர்.

I. அநகாரிக தர்மபால II. பொன்னம்பலம் இராமநாதன்

III. பியசேன சிரிசேன IV. வலிசிங்க ஹரிச்சந்திர

34. பார்சிலோ என்ற போதகரோடு இணைந்து பைபிளை தமிழில் மொழி பெயர்த்தவர்

I. M.C. சித்திலெப்பை II. பொன்னம்பலம் இராமநாதன்

III. பொன்னம்பலம் அருணாச்சலம் IV. ஆறுமுக நாவலர்

35. சிங்கள பௌதயா மற்றும் மகாபோதி சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதி பௌத்த சகவாழ்வின் பெறுமதியினை தெளிவுபடுத்தி புதிய சிந்தனையை முன் வைத்தவர்

I. M.C. சித்திலெப்பை II. பொன்னம்பலம் இராமநாதன்

III. பியதாச சிரிசேன IV. ஹரிச்சந்திர வலிசுந்தர

36. மீகெட்டுவத்த குணாந்த தேரரின் தலைமையில் நடந்த பாணந்துறை விவாதம் விவகாரங்கள் அடங்கிய நூலொன்றை வாசித்ததன் மூலம் பௌத்த சமயம் தொடர்பான விளக்கம் பெற்று இலங்கைக்கு வந்தவர்

I. அநகாரிக தர்மபால II. பொன்னம்பலம் இராமநாதன்

III. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் IV. பியதாச சிரிசேன

37. எகிப்தில் இருந்து ஒராபிபாஷா இலங்கைக்கு வந்தது எப்போது?

I. 1883 II. 1783 III. 1890 IV.1833

38. முஸ்லிம் நேசன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட வருடம்

I. 1818 II. 1982 III. 1889 IV.1882

39. நாவல்களில் பல்வேறு கதாபாத்திரங்களை கொண்டு மதுவின் தீமைகளை எடுத்துக் கூறிய நாடகம்.

I. பராபவ நாடகம் II. மனமே நாடகம்

III. சிங்கபாஹு நாடகம் IV. நரிபேனா நாடகம்

40. கொழும்பு சாஹிரா கல்லூரியின் முதலாவது அதிபராக கடமையாற்றியவர்

I. D.B. ஜாயா II. பொன்னம்பலம் இராமநாதன்

III. ஆறுமுக நாவலர் IV. M.C. சித்திலெப்பை

# பாடம் - 4
# பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள்

1. கோல்புறூக் ஆளுநர் இலங்கைக்கு வந்த ஆண்டு

   I. 1829 II. 1865 III. 1833 IV.1915

2. கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் நிதி தொடர்பான ஆளுநருக்கு இருந்த அதிகாரம் குறைக்கப்பட்டது.

   I. அரசியலமைப்பு சபை நிறுவப்பட்டதால் II. செயற்குழு அமைக்கப்பட்டதால்

   III. இனப்பிரதி நிதித்துவ முறையால் IV. உத்தியோக சார்புள்ளோரின் சக்தி காரணமாக

3. 1833 இல் அமைக்கப்பட்ட அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை

   I. 21 II. 37 III. 15 IV.18

4. கோல்புறூக் சீர்திருத்தங்களுக்கு எதிராக முதன்முதலில் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டது.

   I. ஐரோப்பிய வர்த்தகங்களினால் II. தோட்ட தொழிலாளர்களினால்

   III. இலங்கை தொழிலாளர்களினால் IV. மலைநாட்டு சிங்களவர்களினால்

5. ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சிசெய்து கொண்டிருந்தபோது கோல்புறூக் ஆணைக்குழுவை அனுப்புவதற்கு பிரதான காரணி

   I. அரசின் வரிக் கொள்கை

   II. அரசியல் வருமானத்தை விட செலவு அதிகமாக இருந்தமை

   III. அரசின் நிலக் கொள்கை

   IV. இராஜகாரிய முறை கட்டாய சேவை

6. பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக, பொருளாதாரத்தில் மாற்றத்தை கொண்டு வருவதற்கான ஆலோசனைகளை முன்வைத்த ஆணைக்குழு

   I. குறுமக்கலம் ஆணைக்குழு II. கோல்புறூக் ஆணைக்குழு

   III. மனிங் ஆணைக்குழு IV. சோல்பரி ஆணைக்குழு

7. இலங்கையிலுள்ள நீதித்துறை மற்றும் சட்டத்தறை நிலைமைகள் குறித்து பரிந்துரை வழங்க காலணித்துவ செயலாளரினால் நியமித்து அனுப்பி வைக்கப்பட்டவர்.

   I. ஜோர்ஜ் வோல் II. W.H.G.கோல்புறூக் III. சால்ஸ் H கமரன் IV. ஹென்றி மக்கலம்

8. சால்ஸ் H கமரன் இலங்கைக்கு வருகைத் தந்தது எந்த ஆண்டில்

   I. 1829 II. 1830 III. 1833 IV.1915

9. மலைநாட்டையும் கரைநாட்டையும் ஒன்றிணைத்த ஆட்சியை அறிமுகப்படுத்தியவர்

   I. ஜோரஸ் வோல் II. W.H.G.கோல்புறூக்

   III. சால்ஸ் H கமரன் IV. ஹென்றி மக்கலம்

10. கோல்புறூக் சீர்திருத்தத்திற்கு அமைவாக இலங்கையின் மாகாணங்களின் எண்ணிக்கை

I. 8 II. 9 III. 5 IV. 7

11. இலங்கை சங்கம் உருவாக்கத்திற்கு தலைமைத்துவம் வழங்கியவர்

I. ஜோரஸ் வோல் II. N.M.பெரேரா

III. கொல்வின ஆர். டி சில்வா IV. ஹென்றி மக்கலம்

12. இலங்கை சங்கம் ஆரம்பிக்கப்பட்ட வருடம்

I. 1855 II. 1865 III. 1833 IV.1915

13. ஐரோப்பிய வியாபாரிகளின் போராட்டங்களின் விளைவாக உத்தியோக சார்பற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை எட்டாக உயர்வடைந்தது. அதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இருவர்.

I. மலைநாட்டு சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் சார்பாக இரண்டு பேர்

II. ஐரோப்பி மற்றும் சிங்களவர் சார்பாக இருவர்

III. தமிழ்ர் சார்பாக மற்றும் மலைநாட்டு சிங்களவர் சார்பாக இருவர்

IV. ஐரோப்பி மற்றும் தமிழர் சார்பாக இருவர்

14. 1910 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு காலணித்துவ நாட்டு செயலாளரால் வழங்கப்பட்ட பரிந்துரையின்படி உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தமானது.

I. குறு மக்கலம் அரசியலமைப்பு II. கோல்புறூக் அரசியலமைப்பு

III. மனிங் அரசியலமைப்பு IV. சோல்பரி அரசியலமைப்பு

15. இலங்கையில் மத்திதர வகுப்பினரால் அரசியலமைப்பு சீர்திருத்தம் அவசியம் என உணர்ந்து குரல் எழுப்பி முதன்முறையாக மனுவொன்றை முன்வைத்த ஆண்டு

I. 1908 டிசம்பர் மாதம் II. 1808 டிசம்பர் மாதம்

III. 1808 ஒக்டோபர் மாதம் IV. 1908 ஜனவரி மாதம்

16. கண்டி பிரதேசத்தில் முஸ்லிம், சிங்கள கலவரம் இடம் பெற்ற ஆண்டு

I. 1815 II. 1905 III. 1915 IV. 1833

17. குறுமக்கலம் அரசியலமைப்பின்படி சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை

I. 30 பேர் II. 21 பேர் III. 15 பெர் IV. 23 பேர்

18. சட்டமன்ற சபைக்கு முதன்முறையாக வாக்களிப்பு மூலம் பிரதிநிதி ஒருவரை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை எந்த சீர்திருத்தத்தின் கீழ் வழங்கியது

I. குறு மக்கலம் அரசியலமைப்பு II. கோல்புறூக் அரசியலமைப்பு

III. மனிங் அரசியலமைப்பு IV. டொனமூர் அரசியலமைப்பு

19. 1912 தொடக்கம் இந்நாட்டில் செயற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தமானது

I. குறு மக்கலம் அரசியலமைப்பு II. கோல்புறூக் அரசியலமைப்பு

III. மனிங் அரசியலமைப்பு IV. டொனமூர் அரசியலமைப்பு

20. 1912 ஆம் ஆண்டு தேர்தலில் சட்ட மன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட கல்வி கற்ற இலங்கையர்.

I. N.M.பெரேரா
II. ஜோர்ஜ் வோல்
III. D.S .சேனாநாயக
IV. பொன்னம்பலம் அருனாச்சலம்

21. இலங்கை மத்திதர வகுப்பினரால் அரசியலமைப்பு சிர்திருத்தம் அவசியமென்று குரல் கொடுத்து மனு ஒன்றை குடியேற்ற நாட்டு செயலாளருக்கு அனுப்பியவர்

I. N.M.பெரேரா
II. ஜோர்ஜ் வோல்
III. D.S .சேனாநாயக
IV. ஜேம்ஸ் பீரிஸ்

22. இலங்கை தேசிய சங்கத்தின் முதல் தலைவர்

I. N.M.பெரேரா
II. பொன்னம்பலம் அருனாச்சலம்
III. D.S .சேனாநாயக
IV. பொன்னம்பலம் இராமநாதன்

23. சட்டமன்றத்தில் முதன்முதலாக உத்தியோகம் சார்ந்த பெரும்பான்மையானோர் இடம் பெற்றது எந்த சீர்திருத்தத்தில்

I. குறு மக்கலம் அரசியலமைப்பு
II. கோல்புறூக் அரசியலமைப்பு
III. மனிங் அரசியலமைப்பு
IV. டொனமூர் அரசியலமைப்பு

24. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் மனிங் சீர்திருத்தத்திற்கு பொருத்தமான விடயமாவது

I. சர்வஜன வாக்குரிமை அறிமுகம் செய்யப்பட்டமை
II. நிறைவேற்று அதிகாரம் அறிமுகம் செய்யப்பட்டது
III. இராஜகாரிய முறை நீக்கப்பட்டது
IV. பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அறிமுகம் செய்யப்பட்டது

25. தேசிய அரசுப் பேரவை பாராளுமன்ற முறையினை அறிமுகம் செய்த அரசியலமைப்பு

I. சோல்பரி அரசியலமைப்பு
II. கோல்புறூக் அரசியலமைப்பு
III. மனிங் அரசியலமைப்பு
IV. டொனமூர் அரசியலமைப்பு

26. கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் இலங்கை ஐந்து பிரதேசங்களாக பிரிந்தது. அந்த பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்ட சரியான விடைத்தொகுதி

I. வடக்கு, தெற்கு, கிழக்கு, அக்கினி மூலை மற்றும் வடமேல்
II. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, மத்திய பகுதி
III. வடக்கு, தெற்கு, அக்கினி மூலை வடமேல் மற்றும் மேற்கு பகுதி
IV. வடக்கு, தெற்கு, கிழக்கு, வடமேல், மேற்கு பகுதி

27. கி.பி. 1924 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய திருத்தமாவது

I. குறு மக்கலம் சீர்திருத்தம்    II. கோல்புறூக் சீர்திருத்தம்

III. மனிங் சீர்திருத்தம்    IV. டொனமூர் சீர்திருத்தம்

28. சட்டமன்றத்தில் உத்தியோகத்தர் சார்புள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடைந்த சீர்திருத்தம்.

I. குறு மக்கலம் சீர்திருத்தம்    II. கோல்புறூக் சீர்திருத்தம்

III. மனிங் சீர்திருத்தம்    IV. டொனமூர் சீர்திருத்தம்

29. வில்லியம் மனிங்கிற்கு பின் இந்நாட்டில் ஆளுநராக பதவி ஏற்றவர்.

I. குறு மக்கலம்    II. கோல்புறூக்    III. ஹியு கிளிபரட்    IV. டொனமூர்

30. சர்வஜன வாக்குரிமையை இந்நாட்டுக்கு அறிமுகம் செய்த அரசியலமைப்பு

I. குறு மக்கலம் அரசியலமைப்பு    II. சோல்பரி அரசியலமைப்பு

III. மனிங் அரசியலமைப்பு    IV. டொனமூர் அரசியலமைப்பு

31. நிர்வாக குழுமுறை மற்றும் அதன் செயற்பாடுகளை இந்நாட்டிற்கு அறிமுகம் செய்த சீர்திருத்தம்

I. குறு மக்கலம் சீர்திருத்தம்    II. கோல்புறூக் சீர்திருத்தம்

III. மனிங் சீர்திருத்தம்    IV. டொனமூர் சீர்திருத்தம்

32. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த ஆண்டு

I. 1948 பெப்ரவரி 1    II. 1948 பெப்ரவரி 4

III. 1972 ஆகஸ்ட் 1    IV. 1978 பெப்ரவரி 2

33. மகாத்மா காந்தி இலங்கைக்கு வந்த ஆண்டு

I. 1817    II. 1927    III. 1907    IV. 1903

34. முதலாம் உலக மகா யுத்தத்தில் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் அவர்களின் குடும்பங்களுக்கு உதவி வழங்க ஆரம்பிக்கப்பட்ட இயக்கம்

I. பொப்பி மல் இயக்கம்    II. மது ஒழிப்பு இயக்கம்

III. சூரியமல் இயக்கம்    IV. இலங்கை தேசிய சங்கம்

35. யுத்தத்தின் சமாதான தினமாக கருதப்பட்டு ஒவ்வொரு வருடமும் பொப்பி மலர் விற்பனை செய்யும் தினம்

I. நவம்பர் - 11    II. ஜனவரி - 11    III. பெப்ரவரி - 4    IV. ஒக்டோபர் - 24

36. டொனமூர் அரசியலமைப்பின்படி இலங்கை அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அப்போதிருந்த விவசாய அமைச்சர் யார்?

I. N.M.பெரேரா    II. W.டட்லி சேனாநாயக

III. D.S .சேனாநாயக    IV. கொல்வின் R.D.சில்வா

37. சுதந்திரத்திற்கான போராட்டங்களில் பிரச்சாரம் செய்தலிற்காகவும் சுதந்திரத்தின் குறியீடாகவும் பயன்படுத்தப்பட்டது.

I. பொப்பி மலர் II. தாமரை III. சூரிய மலர் IV. நீலோற்பலம்

38. டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு

I. 1931 II. 1921 III. 1924 IV.1945

39. டொனமூர் சீர்திருத்தத்தின்படி அரச மந்திரி சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை

I. 96 II. 105 III. 225 IV.61

40. அரச காரிய தரசி, நிதி காரியதரசி, நீதி காரியதரசி எனும் மூன்று காரிதரசிகளும் சட்டமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட சீர்திருத்தம் எது?

I. கோல்புறூக் அரசியலமைப்பு II. சோல்பரி அரசியலமைப்பு

III. மனிங் அரசியலமைப்பு IV. டொனமூர் அரசியலமைப்பு

# பாடம் - 5
# பிரித்தானியரின் கீழ் இலங்கையில் சமூக மாற்றங்கள்

1. புராதன சமூகத்தில் விவசாய வேலைகளின் போது அயலவரின் ஒத்தழைப்பு பெறப்பட்டதுடன் அவர்களின் வேலைகளின் போது தமது உழைப்பை வழங்கும் முறை காணப்பட்டது அது எவ்வாறு அழைக்கப்பட்டது.

I. நிலத்தை அனுபவிக்கும் இராஜகாரிய முறை II. அத்தம் முறை

III. சேவாபரவேனி முறை IV.கட்டாய இராஜகாரிய முறை

2. முற்காலத்தில் அவர்களுக்கு சேவையாற்றிய அதிகாரிகளின் வாழ்வாதாரங்களுக்காக நிலங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவை எப்பெயரால் அழைக்கப்பட்டன.

I. நிலத்தை அனுபவிக்கும் இராஜகாரிய முறை II. நிந்தகம்

III. சேவாபரவேனி முறை IV.கட்டாய இராஜகாரிய முறை

3. நாட்டிலுள்ள வயது வந்த ஆண்கள் அனைவரும் ஆண்டில் குறிப்பிட்ட சில தினங்கள் எவ்வித கொடுப்பனவும் இல்லாமல் அரசனுக்கு இலவசமாக சேவை வழங்க வேண்டி இருந்தது. கிராமப்பிரதானிகளால் கிராம சபைகளின் கீழ் இந்த அரச சேவை முறை நடைமுறைபடுத்தப்பட்டது. இச்சேவை முறை எவ்வாறு அழைக்கப்பட்டது.

I. நிலத்தை அனுபவிக்கும் இராஜகாரிய முறை II. பாரம்பரிய இராஜகாரிய முறை

III. உழைப்பை வழங்கும் முறை IV.கட்டாய சேவை இராஜகாரிய முறை

4. அக்காலத்தில் பிடிக்கப்படும் மீனின் ஒரு பகுதி வரியாக செலுத்தப்பட்டது. கோல்புறூக்கின் ஆலோசனைக்கேற்ப மீன் வரிக்குப்பதிலாக அறிமுகம் செய்யப்பட்ட வரி முறை யாது?

I. படகு வரி II. மீன் வரியை நீக்குதல்

III. மீன் வரியைக் குறைத்தல் IV.படகுகளுக்கு அனுமதி பத்திரம் வழங்குதல்

5. கோல்புறூக் இலங்கை வரும் போது நிலவிய பொருளாதார முறைக்கு ஏற்ப அரசின் ஏகபோக உரிமையாக காணப்பட்ட வர்த்தகம் எது?

I. கறுவா மற்றும் வாசனைத் திரவிய வியாபாரம்

II. கறுவா மற்றும் உப்பு வியாபாரம்

III. வாசனைத் திரவியம் மற்றும் யானைத்தந்த வியாபாரம்

IV. யானைத்தந்தம் மற்றும் மாணிக்கக் கல் வியாபாரம்

6. இந்நாட்டில் கோப்பி செய்கையில் பிரித்தானியருக்கு சாதகமாக அமைந்தமைக்கான காரணம் யாது?

I. பிரித்தானியாவுக்கு கோப்பி நிரம்பல் செய்ய மேற்கிந்திய தீவுகளில் கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைந்தமை.

II. கோப்பி பயிர் செய்கை தொடர்பாக இலங்கையில் தொழில்நுட்ப அறிவு உச்ச நிலையில் காணப்பட்டமை.

III. ஐரோப்பிய சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தமை

IV. கரையோர பிரதேசங்களில் கோப்பிச் செய்கை பரவலடைந்தமை

7. 1920 ஆம் ஆண்டுகளில் தென்னை ஏற்றுமதி மூலம் பெற்ற வருமானம் எவ்வளவு?

I. 23% II. 27% III. 30% IV. 15%

8. தென்னை உற்பத்தியை முன்னேற்றுவதற்காக உருவாக்கப்பட்ட தெங்கு ஆராய்ச்சி நிலையம் காணப்படும் இடம்.

I. களுத்துறை II. லுணுவில III. கேகாலை IV. அகலவத்த

9. 19 ஆம் நூற்றாண்டளவில் தென்னைப் பயிர் செய்கை மீது கவனம் செலுத்தப்பட்டமைக்கான

I. வீட்டுத் தோட்டப் பயிராக தென்னை காணப்பட்டமை

II. உள்நாட்டவரும் தென்னை பயிர் செய்கையில் ஈடுபட சந்தர்ப்பம் கிடைக்காமை

III. 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் கோப்பியின் விலை வீழ்ச்சியடைந்தமை

IV. தேயிலை தோட்டங்களில் பக்கப்பயிராக தென்னை பயிரிடப்பட்டமை

10. கி.பி.1867 ஆம் ஆண்டு பெருந்தோட்ட உற்பத்தியாளர் சங்கம் தேயிலை தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற பயிர்ச் செய்கையாளர் சிலரை அனுப்பிய இடம் எது?

I. இந்தியா II. சீனா III. அசாம் IV. பிரித்தானியா

11. குவினைன் எனும் மருந்தை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்பட்ட மூலிகை செடியானது கோப்பிச் செய்கைக்கு மாற்றுப்பயிராக விளங்கியது. அது பின்வருவனவற்றுள் எப் பயிராகும்?

I. சிங்கோனாப் பயிர்ச் செய்கை II. கொக்கோ பயிர் செய்கை

III. தென்னை பயிர் செய்கை IV. தேயிலை பயிர் செய்கை

12. கி.பி. 1920 இல் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் இறப்பர் மூலம் பெறப்பட்டது

I. 25% II. 32% III. 30% IV.15%

13. இறப்பர் பயிர் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு

I. 1900 II. 1800 III. 1877 IV. 1815

14. இறப்பர் பயிர் செய்கையை அபிவிருத்தி செய்வதற்காக இறப்பர் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட இடம் எது?

I. அகலவத்த II. லுணுவில III. கேகாலை IV. களுத்துறை

15. இறப்பர் செய்கையை இந்நாட்டில் பரவலடையச் செய்வதில் பிரித்தானியரை தூண்டிய பிரதான காரணி யாது?

I. பிரித்தானியாவில் மோட்டார் வாகன கைத்தொழில் அபிவிருத்தியடைந்தமையால் இறப்பரின் விலை கூடியது.

II. இறப்பர் பால் வெட்டுவதற்கான தொழிலாளர்களை கிராமங்களிலிருந்து பெற முடியாமை

III. இயற்கை இறப்பருக்கு பதிலாக செயற்கை இறப்பருக்கான கேள்வி உலக சந்தையில் அதிகரித்தமை

IV. இந்நாட்டவருக்கு அதிகளவில் தொழில் வழங்குதல்

16. கோப்பி, இறப்பர், சிங்கோனா போன்ற வர்த்தகப்பயிர்களை இந்நாட்டுக்கு அறிமுகம் செய்தவர்கள்.

I. போர்த்துக்கேயர் II. ஒல்லாந்தர் III. பிரித்தானியர் IV. இந்தியர்

17. இலங்கை தொழிலாளர் சங்கத்தை தோற்றுவிக்க முன்னோடியாக செயற்பட்டவர்.

I. கோ.நடேசர் ஐயர் II. பொன்னம்பலம் அருணாச்சலம்

III. பொன்னம்பலம் இராமநாதன் IV. ஏ.ஈ குணசிங்க

18. தோட்டத் தொழிலாளர் மத்தியில் தொழிற் சங்கங்களை அமைப்பதில் முன்னோடியாக செயற்பட்டவர்.

I. கோ.நடேசர் ஐயர் II. பொன்னம்பலம் அருணாச்சலம்

III. பொன்னம்பலம் இராமநாதன் IV. ஏ.ஈ குணசிங்க

19. பிரித்தானியரின் வருகையால் ஏற்பட்ட பிரதான பொருளாதார மாற்றம் எது?

I. ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் உருவாகியமை

II. தொழிலாளர் முதலாளி வர்க்க வேறுபாடு ஏற்பட்டமை

III. ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதாரத்திற்கு மாறியமை

IV. மரபு ரீதியான பொருளாதார முறை வீழ்ச்சியடைந்தமை

20. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் உள்நாட்டு மரபு ரீதியான பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து பெருந்தோட்ட பயிர் செய்கை விருத்தியடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணி யாது?

I. தரிசு நிலச்சட்டம் அறிமுகம் II. இந்திய தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டமை

III. ஆங்கிலக் கல்வி அறிமுகம் IV. கட்டாய சேவை இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை

21. இலங்கையில் தொழிலாளர் வகுப்பொன்று அறிமுகமானது எப்படி?

I. பிரித்தானியருக்கு பிரபு வகுப்பினர் அடிபணிய வேண்டி ஏற்பட்டமை
II. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் பிரித்தானியரிடம் கைதானது
III. பெருந்தோட்டங்களுக்கு தேவையான தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டமை
IV. இராஜகாரிய முறையில் பாதை வேலைகளில் ஈடுபட்ட அனுபவம்

22. இலங்கையில் முதலாவது திட்டமிடப்பட்ட வேலை நிறுத்தமானது

I. 1848 சுதந்திரப் போராட்டம்
II. 1840 தரிசு நிலச்சட்டத்திற்கு எதிரான சுதேசிகள் போராட்டம்
III. 1893 அச்சுத் தொழிலாளர் வேலை நிறுத்தம்
IV. 1911 மதுவரிச் சட்டத்துக்கு எதிரான போராட்டம்

23. தேயிலை பயிரின் விருத்தியில் செல்வாக்கு செலுத்திய காரணி அல்லாதது

I. தேயிலை பயிருக்கு பொருத்தமான சூழல் நிலவியமை
II. இலங்கை தேயிலைக்கு வெளிநாட்டு சந்தையில் சிறந்த கேள்வி நிலவாமை
III. நவீன தொழிற்சாலைகள் இயந்திரங்கள் பயன்பாடு
IV. போக்குவரத்து வசதிகள் விரிவடைந்தமை

24. இந்நாட்டில் கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள்

I. உலக சந்தையில் கோப்பிக்கு அதிக போட்டி நிலவியமை
II. கோப்பிக்கான கேள்வி குறைந்தமை
III. கோப்பி செய்கை பண்ணப்படும் நிலங்களின் விலை குறைந்தமை
IV. ஹெமிலியா, வெஸ்டாக்ஸ் எனும் இலைவெளிறல் நோய் பரவியமை

25. கொக்கோ பயிர் செய்கையை சிறப்பாக மேற்கொள்ளக்கூடிய பிரதேசமானது எது?

I. மாத்தளை II. பதுளை III. மாத்தறை IV. இரத்தினபுரி

26. இலங்கை தேயிலை செய்கையை அறிமுகம் செய்த நபர் யார்?

I. நடேச ஐயர் II. ஏ.ஈ.குணசிங்க III. டீ.எஸ்.சேனாநாயக IV. ஜேம்ஸ் டெயிலர்

27. தேயிலை செய்கையை முன்னேற்றுவதற்கு தேயிலை ஆராய்ச்சி நிலையம்

I. காலி II. திருகோணமலை III. தலவாக்கலை IV. லுணுவிலை

28. நகர்ப்புற தொழிலாளர்களின் தலைவராக செயற்பட்டவர் யார்?

I. A.E குணசிங்க II. D.S.சேனாநாயக III. நடேச ஐயர் IV. வலிசிங்க ஹரிஸ்சந்திர

29. கி.பி.1922 இல் இலங்கை தொழிலாளர் கட்சியை ஆரம்பித்தவர் யார்?

I. N.M பெரேரா II. கொல்வின் R.D சில்வா III. A.E குணசிங்க IV. பிலிப் குணவர்தன

30. கி.பி. 1880 ஆம் ஆண்டாகும் போது அந்நாட்டில் இருந்து தென்னந்தோட்ட உரிமையாளர்களின் விகிதாசாரம் எவ்வளவு?

I. 35% II. 65% III. 55% IV.75%

31. கி.பி. 1894 ஆம் ஆண்டளவில் எமது நாட்டில் காணப்பட்ட தேயிலை பயிரிடப்பட்ட நிலப்பரப்பு எவ்வளவு?

I. 10000000 ஏக்கர் II. 200000 ஏக்கர் III. 300000 ஏக்கர் IV. 400000 ஏக்கர்

32. முதன் முதல் தேயிலை பரீட்சார்த்தமாக பயிரிடப்பட்ட தோட்டம் எது?

I. பங்கலா தோட்டம் II. லிப்டன் தோட்டம்

III. லூல்கந்துர தோட்டம் IV. ஹோட்டன் சமவெளி

33. கோப்பிக்கான ஏற்றுமதி வரியினை குறைக்க நடவடிக்கை எடுத்தவர்

I. டொரிங்டன் பிரபு II. ஹாகியுலிஸ் ரொபின்சன்

III. எட்வட் பாண்ஸ் IV. வில்லியம்ஸ் கிரகரி

34. இந்நாட்டில் வேகமாக கோப்பிச் செய்கை பரவலடைந்த காலப்பகுதி

I. 1837 - 1847 II. 1827 - 1835 III. 1867 - 1877 IV. 1850 - 1860

35. கோப்பிச் செய்கையின் வீழ்ச்சியை தொடர்ந்து பயிர்ச் செய்கையாளர்கள் கவனம் செலுத்திய பயிர்ச் செய்கை யாது?

I. கராம்பு மற்றும் பாக்கு II. சிங்கோனா மற்றும் கொக்கோ

III. வாழைப்பழம் மற்றும் அன்னாசி IV. மிளகு மற்றும் ஏலக்காய்

36. கிராம மக்களின் சிறிய பிரச்சினைகள் அக்காலத்தில் தீர்த்து வைக்க உதவிய நிறுவனம் எது?

I. கச்சேரி II. கிராமசபை III. பஞ்சாயத்து IV. நீதிமன்றம்

37. சம்பளத்திற்கு உழைப்பை வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியது

I. கமரன் ஆலோசனை மூலம் II. கோல்புறூக் ஆலோசனை மூலம்

III. எட்வட் பாண்ஸ் ஆலோசனை மூலம் IV. டொரிங்டன் ஆலோசனை மூலம்

38. இந்நாட்டில் சேமிப்ப வங்கி ஒன்றை உருவாக்குவதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

I. கமரன் ஆலோசனை மூலம் II. கோல்புறூக் ஆலோசனை மூலம்

III. எட்வட் பாண்ஸ் ஆலோசனை மூலம் IV. டொரிங்டன் ஆலோசனை மூலம்

39. புராதன காலத்தில் குளங்கள் கால்வாய்கள் பராமரிப்பு மற்றும் வீதிகள் விகாரைகள் அமைத்தல் முதலிய பொதுப்பணிகள் கிராம சபைகள் மூலம் நிறைவேற்றப்பட்டன. அவற்றுக்குத் தேவையான உழைப்பை பெற்றுக் கொண்டது.

I. பயிரிடப்பட்ட உழைப்பின் மூலம்

II. நிலத்தை அனுபவிக்கும் இராஜகாரிய முறை மூலம்

III. அடிமை தொழில் மூலம்

IV. இராஜ காரிய முறை மூலம்

40. பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட சாதகமான விளைவு பின்வருவனவற்றுள் எது?

I. ஆங்கில கல்வி அறிமுகம் III. போக்குவரத்த வசதி கிடைக்காமை

II. தொடர்பாடல் வசதி இன்மை IV. மேலைத் தேய கலாசாரம் பரவுதல்

# பாடம் - 6
# இலங்கை சுதந்திரம் அடைதல்

1. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது.

I. 1948 பெப்ரவரி 04 II. 1972 மே 22

III. 1972 ஜூலை 22 IV. 1948 மார்ச் 15

2. சோல்பரி ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது.

I. 1948 பெப்லவரி II. 1945 செப்டம்பர்

III. 1972 ஜூலை IV. 1948 மார்ச்

3. இலங்கையில் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது

I. 1948 பெப்லவரி II. 1949 மே

III. 1947 ஆகஸ்ட் IV. 1945 மார்ச்

4. 1947 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை

I. 42 II. 54 III. 52 IV.44

5. இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?

I. D.S. சேனாநாயக்க அவர்கள் II. டட்லி சேனாநாயக்க

III. ஜோன் கொத்தலாவல IV. சிறிமாவோ பண்டாரநாயக்க

6. பிரித்தானியாவால் இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய இலங்கையின் சுதந்திரப் பிரகடனம் வெளியிட்ட ஆண்டு எது?

I. 1948 பெப்லவரி 04 II. 1947 டிசம்பர் 19

III. 1947 ஆகஸ்ட் 10 IV. 1948 மார்ச் 19

7. இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் கோலாகலமபக திறந்து வைக்கப்பட்டது

I. 1948 பெப்லவரி 04 II. 1948 மே 22

III. 1948 ஜூன் 22 IV. 1948 பெப்ரவரி 10

8. சோல்பரி யாப்பின் படி மூதவை எனப்பட்ட மேல்சபை அங்கத்தவர் தொகை

I. 20 II. 27 III. 30 IV. 45

9. சோல்பரி யாப்பின் தேர்தல் தொகுதிவாரியாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை

I. 95 II. 101 III. 225 IV. 105

10. சோல்பரி யாப்பில் பிரதம நீதிபதியும் உயர் நீதி மன்ற நீதிபதிகளும் நியமிக்கப்படுவது.

I. பிரதமர் மூலம் II. ஜனாதிபதி மூலம்

III. ஆளுநர் நாயகம் மூலம் IV. நீதிச் சேவை ஆணைக்குழு மூலம்

11. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி நிறுவப்பட்ட ஆண்டு எது?

I. 1935 II. 1943 III. 1946 IV. 1951

12. டட்லி சேனாநாயக்க அவர்கள் பிரதம பதவியிலிருந்து இராஜினாமா செய்த பின்னர் பிரதமராக நியமிக்கப்பட்டவர்.

I. D.S. சேனாநாயக்க II. ஜோன் கொத்தலாவல

III. S.W.R.D.பண்டாரநாயக்கா IV. சிறிமாவோ பண்டாரநாயக்கா

13. இலங்கை சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

I. 1947 II. 1935 III. 1951 IV. 1952

14. இலங்கை சமசமாஜக் கட்சியின் ஆரம்ப தலைவராக செயற்பட்டவர்

I. கொல்வின் R.D. சில்வா II. வைத்தியர் S.A. விக்கிரமசிங்க

III. D.B.விஜேதுங்க IV. N.M. பெரேரா

15. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

I. 1947 II. 1933 III. 1943 IV. 1952

16. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப தலைவராக செயற்பட்டவர்

I. கொல்வின் R.D. சில்வா II. வைத்தியர் S.A. விக்கிரமசிங்க

III. D.B.விஜேதுங்க IV. N.M. பெரேரா

17. ஐக்கிய தேசிய கட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

I. 1947 II. 1946 III. 1943 IV. 1952

18. ஐக்கிய தேசிய கட்சியின் ஆரம்ப தலைவராக செயற்பட்டவர்

I. ரனில் விக்கிரமசிங்க II. D.S. சேனாநாயக்கா

III. J.R. ஜயவர்தனா IV. டட்லி சேனாநாயக்கா

19. இலங்கையில் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற ஆண்டு

I. 1947 II. 1948 III. 1950 IV. 1952

20 ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

I. 1951 II. 1946 III. 1943 IV. 1952

21. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப தலைவர்

I.. மஹிந்த ராஜபக்ச II. மைத்திரிபால சிறிசேன

III. S.W.R.D.பண்டாரநாயக்கா IV. சிறிமாவோ பண்டாரநாயக்கா

22. இலங்கையின் முதலாவது பெயரளவு ஜனாதிபதி யார்?

I. வில்லியம் கொபல்லாவ II. வைத்தியர் L.A விக்கிரமசிங்க

III. J.R.ஜயவர்தனா IV. D.B. விஜேதுங்க

23. இலங்கை குடியரசாகிய தினம்

I. 1948 பெப்லவரி 04      II. 1947 டிசம்பர் 19

III. 1972 மே 22      IV. 1948 மார்ச் 19

24. 1972 அரசியல் யாப்பு அறிமுகம் செய்தவர்

I. J.R ஜயவர்தனா      II. சிறிமாவோ பண்டார நாயக்கா

III. R.பிரேமதாச      IV. D.B. விஜேதுங்க

25. 1956 - 1959 வரை பிரதமராக செயற்பட்டவர்

I. J.R ஜயவர்தனா      II. சிறிமாவோ பண்டார நாயக்கா

III. R.பிரேமதாச      IV. S.W.R.D. பண்டார நாயக்கா

26. தமிழ் காங்கிரஸ் கட்சி மற்றும் சமஷ்டி கட்சியை ஆரம்பித்த தலைவர்கள் முறையே

I. G.G பொன்னம்பலம் மற்றும் S.J.V செல்வநாயகம்

II. G.G பொன்னம்பலம் மற்றும் பொன்னம்பலம் இராமநாதன்

III. S.J.V செல்வநாயகம் மற்றும் G.G பொன்னம்பலம்

IV. S.J.V செல்வநாயகம் மற்றும் பொன்னம்பலம் அருணாசலம்

27. S.W.R.D. பண்டார நாயக்கா அவர்கள் படுகொலை செய்யப்பட்ட ஆண்டு

I. 1953      II. 1956      III. 1959      IV. 1948

28. இந்நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி யார்

I. J.R ஜயவர்தனா      II. வில்லியம் கொபல்லாவ

III. R.பிரேமதாச      IV. D.B. விஜேதுங்க

29. இலங்கையில் முதன்முதல் கட்சி அடிப்படையில் தேர்தல் நடைபெற்றது 1947 ஆகும். இலங்கையின் பழைய அரசியல் கட்சி எது?

I. இலங்கை சமசமாஜக் கட்சி      II. போல்ஷலிக் லெனின் கட்சி

III. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி      IV. ஐக்கிய தேசியக் கட்சி

30. அரச திணைக்கள மற்றும் கூட்டுத்தாபனங்களின் சேவை புரிபவர்களின் உரிமை மீறல்கள் தொடர்பாக முறைப்பாடு செய்ய வேண்டிய நபர் யார்?

I. ஜனாதிபதி      II. சபாநாயகர்      III. ஓம்புட்ஸ்மன்      IV. பிரதம நீதியரச்

31. 1972 இற்கு முன் பாராளுமன்றம் என அழைக்கப்பட்ட சட்டசபையானது புதிய யாப்பின் படி தேசிய அரசுப் பேரவை எனப்பட்டது. அதன் பதவிக் காலம்

I. 3 வருடங்கள்      II. 6 வருடங்கள்      III. 5 வருடங்கள்      IV. 4 வருடங்கள்

32. 1972 ஆம் யாப்பின் படி அடிப்படை மனித உரிமைகள் சுதந்திரம் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது எத்தனையாம் விதியாகும்.

I. 1972 யாப்பின் 7வது விதி      II. 1972 யாப்பின் 8வது விதி

III. 1972 யாப்பின் 16வது விதி      IV. 1972 யாப்பின் 18வது விதி

33. இலங்கையின் விவசாய அபிவிருத்திக்காக பெரும் சேவையாற்றிய தலைவர் யார்?
I. D.B.ஜயதிலக II. S.W.R.D. பண்டாரநாயக்கா
III. F.R.சேனாநாயக்கா IV. D.S.சேனாநாயக்கா

34. நாடு முழுதும் ஒரே தேர்தல் தொகுதியாக கணிக்கப்பட்டு நடைபெறும் தேர்தல் எவ்வாறு அழைக்கப்படும்.
I. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு II. பாராளுமன்றத் தேர்தல்
III. மாகாண சபைத்தேர்தல் IV. ஜனாதிபதி தேர்தல்

35. கி.பி. 1947 டிசம்பர் 19 ஆம் திகதி இலங்கைக்கு முக்கிய தினமாக அமைவது ஏன்?
I. வெளிநாட்டு உறவு தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது
II. இலங்கையில் முதலாவது பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றமை.
III. இலங்கையின் சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்படல்
IV. இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் திறந்து வைக்கப்பட்டமை

36. இலங்கையின் நீதிச் சேவை ஆணைக்குழு தொடர்பான சரியான கூற்று எது?
I. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இருவரும், பிரதம நீதிபதி தலைமை வகிப்பார்
II. நிதி அமைச்சர் தலைமை வகிப்பதுடன் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மூலம் இடம் பெறுவர்.
III. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 10 பேர் அடங்குவர்
IV. உயர் நீதியரசர் தலைவர் மற்றும் ஐவர் அடங்குவர்

37. ஸ்ரீ லங்காவானது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அறிமுகம் செய்யப்பட்டது.
I. 1972 ஆம் ஆண்டு யாப்பின் மூலம் II. 1982 ஆம் ஆண்டு யாப்பின் மூலம்
III. 1978 ஆம் ஆண்டு யாப்பின் மூலம் IV. 1965 ஆம் ஆண்டு யாப்பின் மூலம்

38. 1978 ஆம் ஆண்டு யாப்பின் படி ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவரும் நிறைவேற்றுத்துறையின் தலைவரும் ஆவார், எனக் குறிப்பிடும் சரத்து எது?
I. 7வது சரத்து II. 18வது சரத்து III. 30வது சரத்து IV. 21வது சரத்து

39. மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு உட்படாத நீர் தேக்கம்.
I. மாதுறு ஓயா நீர்த்தேக்கம் II. கல் ஓயா நீர்த்தேக்கம்
III. விக்டோரியா நீர்த்தேக்கம் IV. கொத்மலை நீர்த்தேக்கம்

40. இலங்கையில் உள்ள விவசாயக் குடியேற்றங்கள் சில தரப்பட்டுள்ளன.

A. கல்லோயா B. மின்னேரியா C. மினிப்பே
D. கந்தலோயா E. கிரிதலே

மேலே கூறப்பட்ட விவசாய குடியேற்றங்களில் சுதந்திரத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றங்களைக் காட்டும் விடையாக அமைவது.

I. A,E II. B,C III. B,D IV. C,D

41. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் பொல்கொல்லையில் நதியை மறித்து அணைகட்டு நிர்மாணித்து நீரை திசை திருப்பி சுதுகங்கைக்கு நீரை வழங்கி உலர் வலயக் குளங்களுக்கு நீர் விநியோகிக்க நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தேக்கம் எது?

I. ரன்தம்பே நீர்த்தேக்கம் II. போவதென்ன நீர்த்தேக்கம்

III. விக்டோரியா நீர்த்தேக்கம் IV. கொத்மலை நீர்த்தேக்கம்

42. அரசியல் கட்சிகளுக்கு தலைமைத்துவம் வழங்கி தலைவர்களின் பெயர்கள் அ நிரலிலும் அரசியல் கட்சிகள் ஆ நிரலிலும் தரப்பட்டுள்ளன. விடைகளை ஒன்றிணைப்பதன் மூலம் பெறப்படும் சரியான விடை

| அ | ஆ |
|---|---|
| I. A.E குணசிங்க | A. ஐக்கிய தேசியக் கட்சி |
| II. N.M.பெரேரா | B. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி |
| III. D.S.சேனாநாயக்கா | C. தொழிலாளர் கட்சி |
| IV. S.W.R.D பண்டாரநாயக்கா | D. இலங்கை சமசமாஜக் கட்சி |
| | E. கம்யூனிஸ்ட் கட்சி |

I. C.D.A.B II. B.C.A.D. III. C.E.A.B. IV.E.A.C.B

43. கீழே உள்ள தகவல்களை கால அடிப்படையில் வரிசைப்படுத்தும் போது கிடைக்கும் விடையானது பின்வருவனவற்றுள் எது?

A. S.W.R.D பண்டாரநாயக்கா அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகுதல்

B. S.J.V செல்வநாயகம் அவர்கள் சமஷ்டிக் கட்சியை ஆரம்பித்தல்

C. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை கொண்ட யாப்பை அறிமுகம் செய்தல்

D. சிங்கள மொழியை அரச கரும மொழியாக மாற்றுதல்

I. DABC II. BADC . III. ABDC IV.ADBC

44. மகாவலி கங்கையின் கிளை நதியான கொத்மலை ஓயாவை மறித்து அணைக்கட்டை அமைத்து கொத்மலை நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்க உதவிய நாடு.

I. பிரித்தானியா II. சுவிடன் III. மேற்கு ஜேர்மனி IV. சீனா

45. மின் உற்பத்தியை நோக்காக கொண்டு மகாவலி கங்கையில் பொல்கொல்லை அணைக்கட்டுக்கு சற்றுத் தொலைவில் அணைகட்டி நிர்மாணிக்கப்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கம் பணிக்கு உதவிய நாடு

I. பிரித்தானியா II. சுவிடன் III. மேற்கு ஜேர்மனி IV. சீனா

46. மின்னுற்பத்தியையும் நீர்ப்பாசனத்தையும் நோக்காக கொண்டு நிர்மாணிக்கப்பட்ட ரந்தெனிகல நீர்த்தேக்கம் அமைக்க உதவிய நாடு?

I. பிரித்தானியா II. சுவிடன் III. மேற்கு ஜேர்மனி IV. சீனா

47. சுதந்திரத்தின் பின் இலங்கையில் இறப்பர் பயிர் செய்கையை விருத்தி செய்ய இரு தரப்பு வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை கைசாத்திட்ட நாடு எது?

I. சீனா II. கியூபா III. ஜேர்மனி குடியரசு IV. சோவியத் ஒன்றியம்

48. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவச கல்வியை பெற்றுக்கொடுக்க ஆலோசனை முன்வைத்தவர்

I. C.W.W.கன்னங்கர II. டட்லி சேனாயக்கா

III. D.S.சேனாநாயக்கா IV. சிறிமாவோ பண்டாரநாயக்கா

49. 1972 நிலச்சீர்திருத்த சட்டத்தினால் நபர் ஒருவருக்கு வைத்திருக்கக் கூடிய நிலத்தின் அளவு எவ்வளவு?

I. நெல் உற்பத்திக்கு 25 ஏக்கர் வயல் நிலமும் ஏனைய பயிர்களுக்கு 50 ஏக்கர் நிலமும்

II. நெல் உற்பத்திக்கு 30 ஏக்கர் வயல் நிலமும் ஏனைய பயிர்களுக்கு 50 ஏக்கர் நிலமும்

III. நெல் உற்பத்திக்கு 50 ஏக்கர் வயல் நிலமும் ஏனைய பயிர்களுக்கு 75 ஏக்கர் நிலமும்

IV. நெல் உற்பத்திக்கு 50 ஏக்கர் வயல் நிலமும் ஏனைய பயிர்களுக்கு 50 ஏக்கர் நிலமும்

50. கி.பி 1959 இல் முதலாவது கைத்தொழில் பேட்டை எங்கு ஆரம்பிக்கப்பட்டது?

I. இரத்மலானை II. ஏக்கல III. கடுநாயக்கா IV. கொழும்பு

51. இந்நாட்டில் ஆளுநர் நாயகம் பதவி நீக்கப்பட்டு ஜனாதிபதிப் பதவியை அறிமுகப் படுத்திய யாப்பு எது?

I. 1978 யாப்பு II. 1972 யாப்பு III. 1970 யாப்பு IV. 1976 யாப்பு

52. 1972 ஆம் ஆண்டு யாப்பின்படி இலங்கையில் அதிஉயர் நீதிமன்றமாக விளங்குவது

I. உச்ச நீதிமன்றம் II. மஜிஸ்ரேட் நீதி மன்றம்

III. மேல் நீதி மன்றம் IV. மாவட்ட நீதி மன்றம்

53. இந்நாட்டில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவி அறிமுகப்படுத்தப்பட்டது

I. 1978 யாப்பின் மூலம் II. 1972 யாப்பின் மூலம்

III. 1970 யாப்பின் மூலம் IV. 1975 யாப்பின் மூலம்

54. பாராளுமன்ற ஆணையாளர் நாயகம் (ஓம்புட்ஸ்மன்) பதவியை அறிமுகம் செய்ய யாப்பு எது?

I. 1978 யாப்பின் மூலம் II. 1972 யாப்பின் மூலம்

III. 1970 யாப்பின் மூலம் IV. 1948 யாப்பின் மூலம்

55. 1978 யாப்பின் படி பாராளுமன்றத்தின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை

I. 260 II. 225 III. 196 IV. 176

56. 1970 இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னனி அரசாங்கத்தின் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர்.

I. S.W.R.D பண்டாரநாயக்கா II. F.R சேனாயக்கா

III. D.S.சேனாநாயக்கா IV. சிறிமாவோ பண்டாரநாயக்கா

57. லங்கா என அழைக்கப்பட்ட இலங்கை ஸ்ரீ லங்கா எனப் பெயர் மாற்றம் பெற்றது

I. 1947 யாப்பின் மூலம் II. 1978 யாப்பின் மூலம்

III. 1970 யாப்பின் மூலம் IV. 1972 யாப்பின் மூலம்

58. இரண்டாம் உலகப் போர் சந்தர்ப்பத்தில் உணவுப் பொருட்களின் இறக்குமதியை கட்டுப்படுத்த நேர்ந்ததால் உணவு மானியம் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் கூப்பன் புத்தகங்கள் வழங்கப்பட்டது

I. குழந்தைகளுக்கு பால் மா பெற II. உலர் உணவு பொருட்கள் பெற

III. அரிசியை பெற IV. புடவையை பெற

59. சுதந்திரத்தின் பின் கைத்தொழில் துறை வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட நிறுவனம்

I. இலங்கை மத்திய வங்கி II. கைத்தொழில் பேட்டை

III. கொழும்பு பெரும்பாக ஆணைக்குழு IV. மக்கள் வங்கி

60. இலங்கையில் இதுவரையில் நடாத்தப்பட்ட பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு

I. 1982 II. 1972 III. 1980 IV. 1989

# பாடம் - 7
# உலகில் இடம்பெற்ற பிரதான புரட்சிகள்

1. கி.பி.1492 ஆம் ஆண்டில் கரீபியன் கடலில் பகாமாஸ் தீவில் காலடி வைத்தவர்

   I. கிறிஸ்டோபர் கொலம்பஸ் II. வஸ்கொடகாமா

   III. அமெரிக்கோ வெஸ்புசி IV.இரன் பதூதா

2. தற்போதைய அமெரிக்கா கண்டத்தை கண்டுபிடித்தவர்

   I. கிறிஸ்டோபர் கொலம்பஸ் II. வஸ்கொடகாமா

   III. அமெரிக்கோ வெஸ்புசி IV. பாகியன் தேரர்

3. பிரித்தானியாவில் இருந்து வட அமெரிக்கா சென்ற குழுவினர் கி.பி. 1733 ஆம் ஆண்டளவில் நிறுவிய குடியேற்றங்களின் எண்ணிக்கை

   I. 28 II. 13 III. 08 IV.26

4. தென் அமெரிக்காவில் முதன்முதல் குடியேற்றங்களை நிறுவியோர் யார்?

   I. ஸ்பானியோரும், போர்த்துக்கேயரும் II. பிரித்தானியரும், பிரான்ஸியரும்

   III. ஜோர்ஜியரும், பிரான்ஸியரும் IV. செவ்விந்தியரும், பிரித்தானியரும்

5. வட அமெரிக்காவில் முதன்முதல் குடியேற்றங்களை நிறுவியோர் யார்?

   I. ஸ்பானியோரும், போர்த்துக்கேயரும் II. பிரித்தானியரும், பிரான்ஸியரும்

   III. ஜோர்ஜியரும், பிரான்ஸியரும் IV. செவ்விந்தியரும், பிரித்தானியரும்

6. பிரித்தானியரால் அமெரிக்காவில் இறுதியாக நிறுவப்பட்ட குடியேற்றம் எது?

   I. ஜோர்ஜியா II. வேர்ஜினியா III. நியுயோர்க் IV. பென்சில் வேனியா

7. உலகில் முதன்முதல் சமஷ்டி ஆட்சி உருவாகியது

   I. சீனப் புரட்சியின் விளைவாகும் II. பிரான்ஸிய புரட்சியின் விளைவாகும்

   III. ரஷ்ய புரட்சியின் விளைவாகும் IV. அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவாகும்

8. அமெரிக்கா சுதந்திர அரசாக பிரித்தானியாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

   I. சீனப் புரட்சியின் பின்னராகும் II. பிரான்ஸிய புரட்சியின் பின்னராகும்

   III. ரஷ்ய புரட்சியின் பின்னராகும் IV. 1783 பாரிஸ் உடன்படிக்கையின் பின்னராகும்

9. கி.பி. 1763 இற்கு முன் அமெரிக்கா குடியேற்றவாசிகளுக்கு பாதுகாப்பு தொடர்பாக இரு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. அவ்விரு பிரச்சினைகளும்.

I. பிரான்ஸியரினதும் செவ்விந்தியரினதும் அச்சுறுத்தல்

II. பிரான்ஸியரினதும் பிரித்தானியரினதும் அச்சுறுத்தல்

III. செவ்விந்தியரினதும் பிரித்தானியரினதும் அச்சுறுத்தல்

IV. பிரான்ஸியரினதும் ஜோர்ஜியரினதும் அச்சுறுத்தல்

10. பிரான்ஸியருக்கும் பிரித்தானியருக்கும் இடையில் ஏற்பட்ட ஏழாண்டுப் போர் நடைபெற்ற காலப்பகுதி.

I. கி.பி.1802 - 1807 II. கி.பி.1750 - 175

III. கி.பி.1756 - 1763 IV. கி.பி.1505 - 1512

11. ஏழாண்டுப் போரில் ஏற்பட்ட செலவை ஈடுசெய்வதற்காக அமெரிக்க குடியேற்ற வாசிகளிடமிருந்து சுங்கவரி அறவிட நடவடிக்கை எடுத்த பிரித்தானிய பிரதமர் யார்?

I. ஜோர்ஜ் வொசிங்டன் II. ஜோர்ஜ் புஷ்

III. ஜோன் கிரன்வில் IV. பரக் ஒபாமா

12. பொஸ்டன் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் மாறுவேடம் தரித்து நுழைந்த பொஸ்டன் மக்கள் அதில் இருந்த தேயிலைப் பெட்டிகளை கடலுக்கு வீசினர் அவ்வாறு வீசப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை எத்தனை?

I. 502 II. 302 III. 342 IV.432

13. அமெரிக்க சுதந்திரப்போருக்கு உடனடி காரணம் யாது?

I. பொஸ்டன் தேநீர் விருந்து

II. பொருட்களுக்கு வரி அறவிட்டது

III. புதிய வரிக் கொள்கை

IV. ஜோர்ஜியா குடியேற்றத்தின் ஆட்சி தொடர்பான புதிய கொள்கை அறிமுகம்

14. அமெரிக்க சுதந்திரம் தொடர்பான முதலாவது மாநாடு இடம்பெற்ற இடம்

I. ஜோர்ஜியா நகரம் II. பிலடெல்பியா நகரம்

III. பரிஸ் நகரம் IV. பென்சில் வேனியா நகரம்

15. பிலடெல்பியா நகரில் ஒன்று கூடிய குடியேற்ற வாசிகளால் ஒழுங்கமைக்கப்பட்ட படையின் தலைமை பதவிக்கு நியமிக்கப்பட்டவர் யார்?

I. ஜோர்ஜ் புஷ் II. ஜோர்ஜ் வொஷிங்டன்

III. ரொனால ரெகன் IV. பராக் ஒபாமா

16. பிரான்ஸிய புரட்சி இடம் பெற்ற ஆண்டு எது?

I. 1700 II. 1789 III. 1800 IV. 1879

17. கி.பி 1789 இல் அமெரிக்கா குடியேற்ற வாசிகளால் உருவாக்கிக்கொள்ளப்பட்ட அரசியல் யாப்பின்படி முதல் ஜனாதிபதி யார்?

I. ஜோர்ஜ் புஷ் II. ஜோர்ஜ் வொஷிங்டன்

III. ரொனால ரெகன் IV. பராக் ஒபாமா

18. பிலடெல்பியா மகாநாட்டின் பின்னர் அமெரிக்கா குடியேற்றவாசிகளுக்கும் பிரித்தானிய அரசுக்குமிடையில் ஏற்பட்ட முதலாவது போரில் பல மரணங்கள் ஏற்பட்டன. 1775 இல் ஏற்பட்ட இந்தப் போர் இடம் பெற்ற இடம் எது?

I. ஜோர்ஜியா நகரம் II. பிலடெல்பியா நகரம்

III. வொசிங்டன் நகரம் IV. நிவ்யோர்க் நகரம்

19. பிரான்ஸின் வீழ்ச்சிக்கு காரணமான மன்னன் யார்?

I. 16 ஆம் லூயி மன்னன் II. 14 ஆம் லூயி மன்னன்

III. 2 ஆம் லூயி மன்னன் IV. 13 ஆம் லூயி மன்னன்

20. எண்ணிலடங்கா அதிகாரங்களால் " நானே அரசு" எனக் கூறிய மன்னன் யார்?

I. 16 ஆம் லூயி மன்னன் II. 14 ஆம் லூயி மன்னன்

III. 2 ஆம் லூயி மன்னன் IV. 13 ஆம் லூயி மன்னன்

21. பிரான்ஸிஸ் மக்கள் பிரதிநிதிகளின் சபை எப்பெயரால் அழைக்கப்பட்டது.

I. டுமா மண்டலம் II. ஸ்டேட் ஜெனரல்

III. மேல் சபை IV. செனட் சபை

22. தனிப்பட்ட ஒருவரிடம் அதிகாரங்கள் குவிந்திருப்பது பொருத்தமற்றது என " சட்டத்தின் சாரம்" எனும் நூலில் குறிப்பிட்ட தத்துவஞானி யார்?

I. வோல்டேயர் II. ரூசோ

III..மொண்டஸ்கியூ IV. மெகஸ்தனிஸ்

23. மக்கள் சுதந்திரம் தொடர்பான எண்ணக்கருவை முன்வைத்த தத்துவஞானி யார்?

I. வோல்டேயர் II. ரூசோ

III..மொண்டஸ்கியூ IV. மெகஸ்தனிஸ்

24. முடியாட்சியையும் திருச்சபையையும் விமர்சித்து சுதந்திரமாக கருத்தை வெளியிடும் உரிமை உண்டு எனும் கருத்தை முன்வைத்தவர்.

I. வோல்டேயர் II. ரூசோ

III..மொண்டஸ்கியூ IV. தொலமி

25. பிரான்ஸிய புரட்சியின் ஆரம்ப நிகழ்ச்சி எது?

I. டெனிஸ் மைதான சத்தியப்பிரமாணம் II. பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்படல்

III. தர்க்க ரீதியான சிந்தனை IV. மூன்றாவது பிரிவினரின் மண்டபத்தை மூடியமை

26. பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்பட்டது

I. கி.பி 1780 ஜுலை 04 II. கி.பி 1780 ஜுலை 14

III. கி.பி 1789 ஜுலை 04 IV. கி.பி 1789 ஜுலை 14

27. அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக உலகம் முழுவதும் ஆர்வம் ஏற்பட்டமை.

I. சீனப் புரட்சியின் விளைவாகும் II. பிரான்ஸிய புரட்சியின் விளைவாகும்

III. ரஷ்யப் புரட்சியின் விளைவாகும் IV. அமெரிக்க சுதந்திர போரின் விளைவாகும்

28. இந்த சந்தர்ப்பத்தில் நாம் அதிகாரத்தை கைப்பற்றா விட்டால் வரலாறு எமக்கு இரக்கம் காட்ட மாட்டாது'' எனக் கூறியவர்

I. நெப்போலியன் பொனபாட் II. V.I.லெனின்

III. மகா பீட்டர் IV. இரண்டாம் அலெக்ஸ்சாண்டர்

29. கி.பி 1799 இல் பிரான்ஸின் அதிகாரத்தை கைப்பற்றிய இராணுவ அதிகாரி யார்?

I. நெப்போலியன் பொனபாட் II. ரூசோ III. மொண்டஸ்கியூ IV. இரண்டாம் லூயி

30. ''சுதந்திரம், தத்துவம், சகோதரத்துவம் என்ற எண்ணக்கருவை மையமாகக் கொண்டு ஏற்பட்ட புரட்சி எது?

I. 1917 ரஷ்யப் புரட்சி II. 1917 பிரான்ஸியப் புரட்சி

III. 1788 அமெரிக்க சுதந்திர போர் IV. 1676 ஆங்கிலப் புரட்சி

31. ''உணவு, நிலம், சமாதானம்'' எனும் சுலோகத்தின் அடிப்படையில் உருவான புரட்சி

I. 1917 ரஷ்யப் புரட்சி II. 1917 பிரான்ஸியப் புரட்சி

III. 1788 அமெரிக்க சுதந்திர போர் IV. 1676 ஆங்கிலப் புரட்சி

32. புடவை தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வேலை நிறுத்தத்தினால் சார் மன்னன் ஆட்சியை இழக்க நேரிட்டது. இதனோடு தொடர்புடைய புரட்சி எது?

I. 1917 மார்ச் புரட்சி II. 1917 ஒக்டோபர் புரட்சி

III. 1788 அமெரிக்க சுதந்திர போர் IV. 1789 பிரான்ஸிய புரட்சி

33. கி.பி. 1917 ஒக்டோபர் புரட்சியின் பின் ரஷ்யாவில் உருவான புதிய அரசின் தலைவர் யார்?

I. நெப்போலியன் பொனபாட் II. V.I.லெனின்

III. மகா பீட்டர் IV. இரண்டாம் அலெக்ஸ்சாண்டர்

34. சோசலிச சமவுடைமை குடியரசு எனப்படுவது.

I. ரஷ்யா II. ஜேர்மனி III. பிரான்ஸ் IV. அமெரிக்கா

35. கி.பி. 1917 மார்ச் புரட்சியின் பின் சார் மன்னனுக்கு அரசாட்சியை இழக்க நேரிட்டது சார் மன்னனின் ஆட்சி வீழ்ச்சியின் பின் அரச அதிகாரம் கிடைத்தது.

I. V.I.லெனினுக்கு II. கெரென்ஸ்கி III. ஹிட்லருக்கு IV. மென்ஸவிக்கிற்கு

36. V.I.லெனின் தலைமையில் உருவான அரசியல் கட்சி எது?

I. போல்ஷெவிக்  II. மென்சவின்  III. சார்  IV. கெரன்ஸ்கி

37. டெலி, கெபெல், கெப்பிடேசன் ஆகியன.

I. தத்துவ ஞானிகளால் வெளியிடப்பட்ட கருத்தக்கள்
II. மக்களுக்கு இடையூறாக அமைந்தவர்கள்
III. அரசியல் கட்சிகளாகும்
IV. பிரிவு வகுப்பினால் செலுத்தப்பட்ட வரிகளாகும்.

38. ரஷ்யாவைத் தவிர சமவுடைமைக் கொள்கையை கடைபிடிக்கும் ஏனைய உலக நாடுகள்.

I. சீனா, கிழக்கு ஜேர்மனி, வட கொரியா, கியூபா
II. பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா, நெதர்லாந்து
III. இலங்கை, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான்
IV. நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், இத்தாலி

39. அமெரிக்க சுதந்திர போரின் கோஷம் என்ன?

I. உணவு, நிலம், சமாதானம்
II. பாண் இல்லையேல் கேக் சாப்பிடுங்கள்
III. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
IV. பிரதிநிதிகள் இன்றேல் வரியுமில்லை

40. பிரான்ஸ் புரட்சி ஏற்படும் காலத்தில் பிரான்சை ஆட்சி செய்த அரசவம்சம்

I. பூர்போன் அரசவம்சம்  II. மௌரிய அரசவம்சம
III. சார் அரசவம்சம  IV. குப்த அரசவம்சம்

# பாடம் - 8
# உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும்

1. கி.பி. 1918 வரை உலகம் பூராவும் பரவிய யுத்தம் எது?

I. முதலாம் உலக யுத்தம் II. இரண்டாம் உலக யுத்தம்
III. அமெரிக்கா உலகப் போர் IV.ரஷ்ய புரட்சி

2. ஜேர்மனியை ஐக்கியப்படுத்தியவர்

I. ஓட்டோவான் பிஸ்மார்க் II. V. I. லெனின்
III. மகா பீட்டர் IV.இரண்டாம் அலெக்ஸ்சாண்டர்

3. பிரான்ஸிற்கு சொந்தமான அல்சேஸ் மற்றும் லொரையின் பிரதேசத்தை கைப்பற்றியவன்.

I. நெப்போலியன் பொனபாட் II. V. I. லெனின்
III. ஓட்டோவான் பிஸ்மார்க் IV.இரண்டாம் லூயி

4. சரஜீவோ சம்பவத்தினால் ஆஸ்திரியா சில சம்பவங்களை முன்வைத்து சேர்பியாவிடம் நட்டஈடு கேட்டது. சேர்பியா அதை நிராகரித்தமையால் சேர்பியாவுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்த ஆண்டு

I. 1894 ஆகஸ்ட் 08 II. 1914 ஜூலை 08

III. 1914 ஆகஸ்ட் 01 IV. 1924 ஆகஸ்ட் 01

5. சேர்பியாவிற்கு ரஷயா உதவியதால் ஜேர்மனி ரஷ்யாவுக்கு எதிராக யுத்த பிரகடனம் செய்த ஆண்டு

I. 1894 ஆகஸ்ட் 08 II. 1914 ஜூலை 28

III. 1914 ஆகஸ்ட் 01 IV. 1924 ஆகஸ்ட் 01

6. பிரித்தானியா ஜேர்மனுக்கு எதிராக யுத்தப்பிரகடனம் செய்தது எக்காரணத்தினாலாகும்.

I. ஜேர்மன் அரசியல் ரீதியாக சுதந்திரம் அடையாமை
II. ஜேர்மனி தொடர்ந்து நீர்மூழ்கி தாக்குதல்களை நடத்தியதால்
III. நட்பு நாடுகள் ஜேர்மனிக்கு எதிராக தாக்குதல் நடத்தியமை
IV. ஜேர்மனி பெல்ஜியத்துக்குள் புகுந்து பெல்ஜியம் வழியாக பிரான்சை தாக்கியமை

7. முதலாம் உலகப் போரிற்கான உடனடிக் காரணம்.

I. ஐரோப்பா இரு அணிகளாக பிரிந்தமை II. அல்சேஸ் மற்றும் லோரைன் பிரச்சினை

III. குடியேற்றங்கள் குறித்த போட்டி IV. சரஜீவா சம்பவம்

8. முதலாம் உலகப் போரின் விளைவுகளின் ஒன்று

I. ஜேர்மன் சார்பான மத்திய ஐரோப்பிய வல்லரசுகள் அணி தோல்வியுற்றமை
II. வுட்ரோ வில்ஸன் அமெரிக்காவின் ஜனாதிபதி ஆதல்
III. ஜேர்மன் வெற்றி பெறல்
IV. ஆஸ்திரியாவில் தொடர்ந்து முடியாட்சி நிலவியமை

9. சர்வதேச சங்கத்தை தோற்றுவித்தவர்.

I. இத்தாலி பிரதமர் ஒவெண்டோ

II. ஐக்கிய அமெரிக்கா ஜகாதிபதி வுட்ரோ வில்ஸன்

III. பிரித்தானிய பிரதமர் லொயிட் ஜோர்ஜ்

IV. பிரான்ஸிய பிரதமர் க்லைமன் ஷோ

10. ஹிட்லரின் அரசியல் கொள்கை

I. நாசிச வாதம் II. சமவுடைமை வாதம் III. அஹிம்சை வாதம் IV. பாசிச வாதம்

11. இரண்டாம் உலகப் போரில் அச்சு நாடுகள் அணியில் அடங்கும் நாடுகள்

I. ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் II. பிரித்தானியா, பிரான்ஸ், ஜப்பான்

III. ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, சீனா IV. ஜப்பான், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா

12. ஐரோப்பாவுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போர் இரண்டாம் உலகப்போராக உருவெடுத்ததிற்கான காரணம்

I. வின்ஸ்டன் சேர்ச்சில் பிரிதானிய பிரதமரானமை

II. அமெரிக்கா அரச செயலாளர் ஜோன் மாசலின் மார்சல் திட்டத்தினால்

III. ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தமை

IV. 1941 இல் ஜப்பானிய பேர்ள் துறைமுகத்தை தாக்கி அமெரிக்காவின் கடற் படையை பாதிப்படையச் செய்தமை

13. இரண்டாம் உலகப் போர் இடம் பெற்ற காலப் பகுதி

I. 1914 - 1918 II. 1930 - 1933 III. 1939 - 1945 IV. 1920 - 1925

14. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை கொண்ட நாடுகளாவன.

I. ஜேர்மன், பிரான்ஸ், சோவியத் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, சீனா

II. பிரித்தானியா, பிரான்ஸ், சோவியத் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, சீனா

III. இந்தியர், பிரான்ஸ், சோவியத் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, சீனா

IV. ஜப்பான், சோவியத் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, சீனா

15. கி.பி.1939 இல் ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடு

I. அயர்லாந்து II. செக்கோச்லாவாக்கியா III. போலந்து IV. ரஷ்யா

16. ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நிறுவகம் எது?

I. பாதுகாப்புச் சபை II. பொதுச்சபை III. செயலகம் IV. நம்பிக்கை பொறுப்புச்சபை

17. “ஆயுத பலத்தால் ஐந்து வருடங்களில் பெற்றவைகளை பாதுகாக்க மேலும் ஐம்பது வருடங்கள் ஆயுதங்கள் தரித்த நிலையில் இருக்க வேண்டி வரும்” எனக் கூறிய ஜேர்மனிய சேனாதிபதி யார்?

I. ஜோன் கிரன்வில் II. நெப்போலியன் பொனபாட் III. ஏ.ஐ.லெனின் IV. வொன்வோல்

18. கி.பி. 1915 இல் லுசிதானியா எனும் பயனிகள் கப்பல் ஜேர்மனியர்களால் மூழ்கடிக்கப்பட்டது. இக்கப்பலுக்கு சொந்தமான நாடு

I. பிரிதானியா II. ஐக்கிய அமெரிக்கா III. இத்தாலி IV. பிரான்ஸ்

19. கி.பி. 1956 இல் சுயெஸ் கால்வாயை அரச உடைமை ஆக்கியவர்

I. அப்துல் கையும் II. அப்துல் கமால் நாசர் III. நவாஸ் ஜிப்ரி IV. சதாம் ஹுசைன்

20. பொதுச்சபையின் அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை

I. 150 II. 193 III. 173 IV. 183

21. இரண்டாம் உலகப் போரில் நேச நாடுகள் அணியை மட்டும் பிரதிநிதித்துவப் படுத்திய நாடுகளை மட்டும் கொண்ட விடை

I. பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், பிரித்தானியா

II. பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா

III. பிரான்ஸ், ஜேர்மனி, ஹங்கேரி, ரூமேனியா

IV. பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா

22. இரண்டாம் உலகப் போருக்கு ஏதுவான காரணிகளை மட்டும் காட்டும் விடை

I. ஹிட்லரின் எழுச்சியும், முசோலினியின் செயற்பாடுகளும், ஜப்பான் ஆக்கிரமிப்பு கொள்கையும்

II. சர்வதேச சங்கத்தின் தோல்வியும் ஹிட்லரின் எழுச்சியும், சரஜீவோ சம்பவமும்

III. இத்தாலியில் முசோலினியின் செயற்பாடுகளும், ஜப்பான் ஆக்கிரமிப்பு கொள்கையும் பிஸ்மாக்கின் உடன்படிக்கை கொள்கை.

IV. ஹிட்லரின் எழுச்சியும், செயற்பாடுகளும் அல்சேல்ஸ் லோரன்ஸ் பிரச்சினையும்

23. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெறும் நாடுகளில் எண்ணிக்கை 15. அதில் நிரந்தர உறுப்புரிமை நாடுகள் எத்தனை?

I. 5 II. 3 III. 6 IV. 7

24. ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனம் எது?

I. நம்பிக்கை பொறுப்புச் சபை II. சர்வதேச நீதிமன்றம்

III. பொதுச் சபை IV. சமூக பொருளாதார சபை

25. ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்குவதற்கான கொள்கைப் பிரகடனத்தை வடிவமைத்தது எந்த மகாநாட்டிலாகும்.

I. 1945 சென்பிரன்சிஸ்கோ மகாநாட்டில்

II. 1919 ஐக்கிய அமெரிக்கா நியுயோர்க் மகாநாட்டில்

III. 1945 பொஸ்டன் மகாநாட்டில்

IV. 1945 ஐக்கிய அமெரிக்கா மாஷல் திட்டத்தில்

26. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு அனுமதி பெற வேண்டியது.

I. நிரந்தர உறுப்புரிமை நாடுகளிடம்

II. அனைத்து அங்கத்துவ நாடுகளிடம்

III. நிரந்தர உறுப்புரிமை நாடுகளும் ஏனைய அங்கத்துவ நாடுகளும்

IV. நிரந்தர உறுப்புரிமை உள்ள ஒரு நாடும் ஏனைய அங்கத்துவ நாடுகளிடம்

27. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம்

I. பிரித்தானியாவின் லண்டன் நகரம் II. ஐக்கிய அமெரிக்காவின் வொஷிங்டன் நகரம்

III. நெதர்லாந்தின் ஹேக் நகரம் IV. பிலிபைன்னின் மெனிலா நகரம்

28. ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தை பாதுகாக்க எடுத்த முயற்சிகளில் அடங்காதது.

I. சூயஸ் கால்வாய் நெருக்கடி II. வளைகுடா நெருக்கடி

III. இத்தாலி அபீசினியா பிரச்சினை IV. கியூபாவின் ஏவுகனை நெருக்கடி

29. இரண்டாம் உலகப்போருக்கு முன் உலகின் பிரதான வல்லரசுகளாக விளங்கிய நாடுகள்.

I. பிரான்ஸ், பிரித்தானியா II. பிரான்ஸ், தென் அமெரிக்கா

III. பிரான்ஸ், மேற்கிந்திய தீவுகள் IV. பிரான்ஸ், இந்தியா

30. கி.பி. 1922 இல் பாசிச வாதக் கொள்கை மூலம் இத்தாலியில் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றியவர்.

I. அடோல்ப் ஹிட்லர் II. பெனிடோ முலோலினி

III. ஒடோவன் பிஸ்மார்க் IV. பேர்டினன் இளவரசன்

31. மாஷல் திட்டம் என அழைக்கப்படுவது

I. மேற்கு ஜேர்மன் மூலம் ஜப்பானுக்கு உதவி வழங்கும் திட்டம்
II. இரண்டாம் உலகப் போரில் தோல்வியுற்ற நாடுகளை கட்யெழுப்பும் திட்டமாகும்
III. முதலாம் உலகப் போரில் தோல்வியுற்ற நாடுகளை கட்யெழுப்பும் திட்டமாகும்
IV. ஜப்பானினால் அமெரிக்காவுக்கு எதிராக அமைக்கப்பட்ட யுத்த உத்தியாகும்.

32. இரண்டாம் உலகப் போரின் போது கொழும்புக்கு குண்டு வீசிய நாள்

I. 1942 ஏப்ரல் 05 II. 1942 ஏப்ரல் 07

III. 1945 ஏப்ரல் 01 IV. 1945 ஏப்ரல் 09

33. கி.பி. 1941 ஆகஸ்ட் மாதத்தில் அத்திலாந்திக் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது

I. பிரித்தானிய பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் மற்றும் அமெரிக்கா ஜனாதிபதி பிராங்கிலின் ரூஸ்வெல்ட்

II. பிரித்தானிய பிரதமர் லொயிட் ஜோர்ஜ் மற்றும் அமெரிக்கா ஜனாதிபதி வுட்ரோ வில்ஷன்

III. பிரான்சிய பிரதமர் கிளமென்சோ மற்றும் அமெரிக்கா ஜனாதிபதி பிராங்கிலின் ரூஸ்வெல்ட்

IV. பிரான்சிய பிரதமர் கிளமென்சோ மற்றும் பிரித்தானிய பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில்

34. இரண்டாம் உலகப் போரின் பின் ஜப்பான் ஹிரோஹித்தோ பேரரசன் நிபந்தனையற்ற விதத்தில் சரணடைந்தது.

I. 1942 ஏப்ரல் 07 II. 1942 ஏப்ரல் 09

III. 1945 ஆகஸ்ட் 14 IV. 1945 ஏப்ரல் 09

35. பேர்ள் துறைமுகத்தில் இருந்த கடற்படை முகாமிற்கு ஜப்பான் குண்டு வீசியதால் ஜப்பானுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்த அமெரிக்க ஜனாதிபதி யார்?

I. வுட்ரோ வில்ஷன் II. ஜோர்ஜ் வொசிங்டன்

III. பிராங்லின் ரூஸ்வெல்ட் IV. வின்ஸ்டன் சேர்ச்சில்

36. பேர்ள் துறைமுகத்திற்கு குண்டு வீசிய ஆண்டு

I. 1941 ஏப்ரல் 07 II. 1941 நவம்பர் 09

III. 1945 ஏப்ரல் 07 IV. 1941 நவம்பர் 07

37. ஹிட்லரின் தாய் நாடு

I. ஆஸ்திரியா II. ஜேர்மன் III. இத்தாலி IV. போலந்து

38. ஐக்கிய நாட்டு சபையின் சிறுவர் நிதியம்

I. UNESCO II. WHO III. UNICEF IV. NETO

39. ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார தாபனம்

I. UNESCO II. WHO III. UNICEF IV. NETO

40. உலக சுகாதார தாபனம்

I. UNESCO II. WHO III. UNICEF IV. NETO